
தமிழரசு
1-11-1987 ரூ. 1



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மருத்துவப் பரிசோதனை முடிந்து அமெரிக்காவிலிருந்து 31.10.87 அன்று தமிழகம் திரும்பியபோது சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களை 1.11.87 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சந்தித்து உரையாடுதல்.





"நாட்டின் சேவைக்காக நான் உயிரிழக்க நேர்ந்தால் அதற்காகப் பெருமைப்படுகிறேன். என்னுடைய ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நாட்டின் வளர்ச்சிக்கே பயன்படும்; நாட்டை வலிமையும் வேகமும் உள்ளதாக்கும்"

— திருமதி **இந்திரா காந்தி**

( பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தமது மறைவிற்கு முன்தினம் (30.10.1984) புவனேஸ்வரில் (ஒரிசா மாநிலம்) ஆற்றிய கடைசி உரையின் ஒரு பகுதி )


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018 பிரபவ - ஐப்பசி 15

மலர் : 18 1-11-1987 இதழ் : 9



# மனிதநேயத் தலைவர்

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. உலகத்தில் தன்னிகரில்லாத் தலைவராகத் திகழ்ந்த மாபெரும் தலைவர் அவர்.

தமிழ்நாடு அரசின் சார்பில், மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவு கூரும் வகையில், சென்னை இராஜாஜி மண்டபத்தில் 31-10-1987 அன்று 'தேசிய மறு சமர்ப்பண நாள்' கொண்டாடப்பட்டது.

பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுடன் நிகழ்ச்சி தொடங்கப் பெற்றது. செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றுகையில் கூறியதாவது:

''நாட்டின் ஒற்றுமைக்காகத் தன்னையே அர்ப்பணித்த மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கட்கு இந்த அரசு விழா கொண்டாடுகிறது. எந்தக் காலகட்டத்திலும், மொழி, கலாச்சார அடிப்படையில் இந்தியா பிரிக்க முடியாததாக இருக்க நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.''

சட்டமன்ற உறுப்பினர் திரு செ. கு. தமிழரசன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது : ''மறைந்த பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற 20 கோடி ஆதிதிராவிட இஸ்லாமிய சீக்கியர்களின் பிரதிநிதியாகவும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கினார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள சலுகை மேலும் பத்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க 1980-இல் ஏற்பாடு செய்தார். அதை, ஆதிதிராவிட சமுதாயம் மறக்காது. ஜாதி பேதம் ஒழிய இன்று நாம் உறுதி எடுத்துக் கொண்டால் அதுவே மறைந்த பிரதமர் இந்திரா அவர்கட்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

சட்டமன்ற உறுப்பினர் திரு பி. உத்திராபதி அவர்கள் பேசுகையில் கூறியதாவது : ''மறைந்த பாரதப்பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் குடும்பம் நாடு விடுதலை பெறப் பாடுபட்டது. வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளை ஒழிக்கப் பாடுபட்டார். அன்னை இந்திரா மக்கள் ஆட்சி மலர பங்களா தேசத்தை ஏற்படுத்தப் பாடுபட்டார். ஏகாதிபத்தியவாதிகள் எந்த ரூபத்தில் வந்தாலும் அதை முறியடிக்கப் பாடுபட்டார். இந்திரா நினைவுநாளில் மத, சாதி, வறுமையைப் பயன்படுத்தி வருகிறவர்களிடமிருந்து இந்திய ஒற்றுமையைக் காக்கப் பாடுபட வேண்டும்.''

திரு எம். கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது: ''பிரிட்டிஷ் ஆட்சியை முறியடிக்க நாம் சபதம் எடுத்தோம். வெள்ளையனை வெளியேற்றினோம். நாம், எந்த, மதம், சாதியாக இருந்தாலும் ஒற்றுமைக்காகப் பாடுபட வேண்டும். இந்திராவுக்குப் பிறகு இந்தியா உடையும் என்றார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. மதம் என்ற சக்தியைப் பயன்படுத்துபவர்களை நாம் மிகவும் கண்டிக்க வேண்டும். சென்னையில் மருந்து, துணி போன்றவற்றைச் சேகரித்து இலங்கைக்கு நாம் வழங்க வேண்டும். அதுதான் இந்தியா இலங்கை ஒப்பந்தத்துக்கு நாம் செய்யும் உதவி ஆகும்.''

நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் திரு. எம். பழநியாண்டி அவர்கள் பேசுகையில் கூறியதாவது : ''பாரதி சொன்னபடி நிமிர்ந்த நடை, பார்வையுடன் பாரதப் பிரதமர் இந்திரா வாழ்ந்தார். சிறு வயதிலேயே விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார் இந்திரா. உலக சரித்திரத்தைக் கரைத்து குடித்தவர் இந்திரா. நான் எப்படி இறந்தால் என்ன? என்னுடைய ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நாட்டிற்கே என்று பாடுபட்டார். மக்களை மறந்தது கிடையாது. அணுசக்தியை நல்ல முறையில் மின்சக்திக்காகப் பயன்படுத்தினார். இது ஆக்கபூர்வமான பணி. அழிவுப் பணி அல்ல.''

திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''இந்தியா ஒருமதச் சார்பற்ற நாடு. இங்கு எல்லா மதத்தினருக்கும் சம உரிமை வழங்கியவர் மறைந்த பிரதமர் இந்திராகாந்தி. ஆனால் அவர் ஒரு மத வெறியனாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

''மதவெறியன் ஒருவனால் மகாத்மா காந்தி அவர்கள் கொல்லப்பட்டதுபோலவே




இந்திராகாந்தியும் மதவெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதுவும், மிகக்கொடுமையாக அவரின் பாதுகாப்பாளனே சுட்டுக் கொன்றுவிட்டான்.

''நாட்டின் உயர்வுக்கு, ஒற்றுமைக்குப் பன்னெடுங்காலமாகப் பாடுபட்டு வந்த ஒரு சிறந்த தலைவியை இழந்துவிட்டோம். அவருக்கு நாம் நம் அஞ்சலியைச் செலுத்துவோம்.

''அன்னை இந்திராவின் வாக்குறுதியை மத்திய அரசு இன்றளவும் பின்பற்றி, புரட்சித் தலைவருக்கு எல்லா வகையிலும் ஆதரவு அளித்து வருகிறது.

''இந்திரா காந்தியினுடைய 20 அம்சத் திட்டத்தைத் தமிழக அரசு சிறப்பாக நிறைவேற்றி வருவதாக மத்திய அரசு பாராட்டுகிறது.

''பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல மக்களிடம் சென்று அவர்களிடம் பழகி அவர்களின் தேவை அறிந்து அங்கிருந்து திட்டங்கள் தொடங்கினால்தான் மக்களுக்குப் பயன்படும்.

''இந்த ரீதியில்தான் புரட்சித் தலைவர் அவர்கள் செய்து வருகிறார்கள்.

''புதுப்பிக்கப்பட்ட புதிய 20 அம்சத் திட்டத்தோடு புரட்சித் தலைவர் திட்டங்களையும் சிறப்புடன் நிறைவேற்ற, ஏழைஎளிய மக்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட இந்த மறு சமர்ப்பண நாளில் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்.''

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேருரையாற்றுகையில் கூறியதாவது :

''இந்திராகாந்தி அம்மையார் மறைந்து மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அவர் நாட்டுச் சேவைக்குத் தன்னைத்தானே ஒப்படைத்துக்கொண்டு அரும்பணி ஆற்றி, புதிய வரலாற்றைப் படைத்தார். அவரது நினைவாகத் தேசிய மறு சமர்ப்பண நாள் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

''இந்திரா அவர்களின் ஆட்சித் திறனையும், அறிவுத் திறனையும் நாம் அறிவோம். இளைஞர்கள், மாணவர்கள், அவரது வழியைப் பின்பற்ற வேண்டும். அரசியலுக்காகத் தன்னையே அர்ப்பணித்து அரசியலாலேயே மறைந்தார். பண்டிதநேரு வளர்த்த கண்ணியத்தை இந்திரா கட்டிக்காத்தார். துணிவுடன் செயல்பட்டார்.

''யாழ்ப்பாணத்தில் போர் நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது போர் அல்ல. யாழ்ப்பாணத்தைப் பிடித்து அங்கு ஆட்சி நடத்த வேண்டுமென்றோ ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணமோ இந்திய அரசுக்கு எள்ளளவும் இல்லை. இந்திய இலங்கை ஒப்பந்தப்படி இந்திய அமைதிப் படை புலிகளிடமிருந்து ஆயுதங்களை எடுத்து வருகிறதே தவிர போர் நடத்தவில்லை.

''ஆயுதங்களை ஒப்படைத்து விட்டுப் பேச்சு நடத்த வாருங்கள் என்று பிரதமர் சொல்லியிருக்கிறார். விடுதலைப்புலிகள் சிந்திக்க வேண்டும்.

''இன்று சிலர் இலங்கை இன்னொரு நாடு இந்தியா தலையிடுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதை 1983-ஆம் ஆண்டில் கேட்டு இருந்தால் நியாயமாக இருக்கும்.

''ஈழத்தமிழர்கள் வாழ்வு மலர அன்று இந்திரா அம்மையார் ஆரம்பித்து வைத்த திட்டத்தை, பிரதமர் ராஜீவ் காந்தி, முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த ஒப்பந்தம் நிறைவேற எல்லோரும் ஒத்துழைப்பு தந்தால் இப்போது உள்ள பிரச்சினை விரைவில் தீரும்.''

விழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் கூறியதாவது: ''இந்திரா காந்தியின் குடும்பத்தை, தேசம் தனது சொத்தாக்கிக் கொண்டதே தவிர, அவர் குடும்பத்தினர் தேசத்தைத் தங்களது சொத்தாக்கிக் கொள்ளவில்லை. இந்திராகாந்தியைப் போல உலகத்தில் பல்வேறு தலைவர்கள் மதவெறி பிடித்தவர்களால் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இந்த வன்முறைச் செயலை அடியோடு நாம் ஒழிக்க வேண்டும்.

''அதற்காக இந்த நாளில் சபதம் ஏற்கவில்லை என்றால் வேறு எந்த நாளில் வன்முறை ஒழிக்கச் சபதம் ஏற்க முடியும்?''

விழா இறுதியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் திரு அ. ராஜமாணிக்கம் நன்றி கூறினார்.



# உலக உத்தமருக்கு ஒருவார விழா!

அண்ணல் காந்தியடிகள் 119வது பிறந்த நாள் விழா, சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் 2.10.87 அன்று நடந்தது.

செய்தி-சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு. ஏ. பி. முத்துசாமி இ. ஆ. ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மூதறிஞர் இராஜாஜி நினைவாலயத்தில் கட்டப்பட்டுள்ள இராஜாஜி நூல் நிலையத்தைத் திறந்து வைத்தும், 40-வது ஆண்டு விடுதலைநாளையொட்டி டெல்லியிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித மண்ணைக் கொண்டு காந்தி மண்டப வளாகத்தில் 40 மரக் கன்றுகள் நட்டும், கண்காட்சியைத் திறந்து வைத்தும், விழாவினைத் தொடங்கி வைத்தும் மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் பேசுகையில், ''காந்தியடிகள் விட்டுச் சென்ற பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டும். தீண்டாமை, வறுமைக் கொடுமைகளை நீக்க இளைஞர்கள் முன் வர வேண்டும்'' என்றார்.

விழாவில், மேதகு ஆளுநர் அவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு இலவசக் கருவிகளை வழங்கினார். சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ராமாநுஜம், மாசிலாமணி ஆகியோர் குடும்பத்துக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. காந்தி பிறந்த நாள் விழாவையொட்டி நடத்திய பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற புதுக்கல்லூரி மாணவர் என். இளங்கோ, இசைப்போட்டியில் வெற்றி பெற்ற ஜெயின் கல்லூரி மாணவர் பி.வி.வெங்கடேஷ் ஆகியோருக்கு ஆளுநர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ''பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதை அகிம்சை, உண்மை, நியாயம், நீதி அடிப்படையில் தான் தீர்க்க முடியும்'' என்றார்.

விழாவில் டாக்டர் நா.மகாலிங்கம், திருசி.ஆர். பட்டாபிராமன், டாக்டர் அவ்வை நடராசன் ஆகியோர் காந்தியடிகளின் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''அண்ணல் காந்தியடிகள் அறியாமை அகலப் பாடுபட்டார். கொடிய தொழுநோய் ஒழிக்கத் தொண்டாற்றினார். தீண்டாமை ஒழிய காந்தியடிகள் கண்ட கனவைப் புரட்சித் தலைவர் நனவாக்கி வருகிறார்'' என்றார்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் ''40வது சுதந்திர விழா, கோவிந்த வல்லப பந்த் நூற்றாண்டு விழா, நாமக்கல் கவிஞர் நூற்றாண்டு விழா, சத்தியமூர்த்தி நூற்றாண்டு விழா எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியா-இலங்கை உடன்பாடு ஏற்பட்டு இந்திய சமாதானப்படை இலங்கைக்குச் சென்ற இந்த வேளையில், அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவை நாம் கொண்டாடுகிறோம்'' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திருஇரா.கற்பூர சுந்தரபாண்டியன் இ. ஆ. ப. அவர்கள் நன்றி நவின்றார்.

விழா முடிவில் கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடந்தது, காந்தியடிகள் பற்றிய திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

காந்தியடிகள் பிறந்த நாளையொட்டிக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இதில் செய்தி-மக்கள்தொடர்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, காதி கிராப்ட், சமூக நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகியவை பங்கு பெற்றிருந்தன.

விழாத் தொடக்கத்தில் மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா, தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத்தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு தொழிலமைச்சர் திரு க. இராசாராம், மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு. வி.வி.சுவாமிநாதன், திரு.சி.ஆர். பட்டாபிராமன் ஆகியோர் நெல்லி, பலா, நாவல், கொய்யா மரக்கன்றுகளை நட்டார்கள்.

## தீண்டாமை ஒழிப்பு நாள்

அக்டோபர் 3-ஆம் நாள் தீண்டாமை ஒழிப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு பெ.பாஸ்கரதாஸ் இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கி உரையாற்று



கையில் "தாழ்த்தப்பட்டமக்களும்சமுதாயத்தில் அங்கம் வகிக்கிறார்கள் என்று காந்தியடிகள் கூறினார்கள். அதற்காகவும் பாடுபட்டார்கள். மற்ற மக்களைப் போல அவர்களும் வாழ வேண்டும் என்று விரும்பினார்கள். காந்தி காட்டிய வழியில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது" என்று கூறினார்.

விழாவில் செய்தி - மக்கள் தொடர்புத்துறையின் துணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன், திரு டி.செங்கல்வராயன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி டி. யசோதா, டாக்டர் சு. பாலசந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

## கதர் மற்றும் கிராமத்தொழில் நாள்

4.10.87 அன்று கதர் மற்றும் கிராமத் தொழில் நாளாகக் கொண்டாடப்பட்டது.

கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. வரவேற்புரை ஆற்றினார்.

விழாத்தலைமை ஏற்ற மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தமது உரையில்:

''மகாத்மா காந்தி அவர்களை இந்திய நாட்டின் தந்தையாக, இந்திய நாடு சுதந்திரம் பெற தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் தியாகியாக, தலைவராக நாட்டை வாழ்விக்கப் பிறந்த கோமானாக நாம் சிறப்பித்துக் கொண்டாடுகிறோம்.

''உலகில் எந்தத் தலைவரோடும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு அவர் சிறந்து விளங்கினார். பீரங்கியாயிருந்தாலும் சரி, துப்பாக்கியாயிருந்தாலும் சரி அவற்றையெல்லாம் அகிம்சை என்ற தத்துவத்தின் மூலம் அடிபணிய வைக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டினார்.'' என்று கூறினார்.

சிறப்புரை ஆற்றிய திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள், ''தனதுநிர்மாணப் பணித் திட்டத்தில்கதர் மூலம் நூல் நூற்பதை சிறந்த ஒரு பணியாக வகுத்துக் கொடுத்தார்கள். எந்தக் கருத்தையும் முதலில் தம் வாழ்க்கையில் செயல்படுத்தி அதன்பின் தான் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய பண்பு கொண்டவர் மகாத்மா அவர்கள்'' என்று கூறினார்.

''கிராமத் தொழில்களை வளர்க்க வேண்டும் என்று காந்தியார் கண்ட கனவினை புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்'' என்று விழாவில் கலந்து கொண்ட கதர் கிராமத் தொழில வாரியத் துணைத் தலைவர் கவிஞர் திரு நா. காமராசன் அவர்கள் கூறினர்.

மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராஜன் அவர்கள் விழா முன்னிலை வகித்தார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''உலகில் தலைவர்கள் தோன்றுவதும் மறைவதும் தொன்றுதொட்டு நிகழ்வதுதான். எனினும் அந்தத் தலைவர்களில் மாறுபட்டவராக உலகப் பெரியார் காந்தி விளங்கினார் என்றால் அது மிகையாகாது.

மிகப்பெரியப் பொறுப்புகளை தமது தோளில் சுமந்து, இந் நாட்டு மக்கள் மத்தியிலே கொள்கையைப் பரப்பி, மக்களுடைய ஒட்டுமொத்த சக்தியைத் திரட்டி ஒரு மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தை இந்த நாட்டைவிட்டு விரட்டுவதற்குத் தலைமை ஏற்றார்கள். தர்மத்தின் வழிமுறையிலேயே ஒரு போராட்டத்தை நடத்திடமுடியும் என்ற நம்பிக்கையை முதன் முதலில் உலகத்திற்குத் தந்தவர் காந்தியார் அவர்கள்.

''கிராம ராஜ்யம் கிராமத்திலே மலர்ந்தால்தான் இராம ராஜ்யம் மலரும் என்று குறிப்பிட்டார்கள். காந்தியார் அவர்கள் குறிப்பிட்டது இல்லாமை இல்லாதிருக்க வேண்டும், எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், வன்முறை இல்லாமல் அமைதியுடன் வாழும் சூழ்நிலை மக்களுக்குக் கிட்டவேண்டும் என்பதாகும். அவரின் எண்ணம் தமிழ்நாட்டில் ஈடேறி வருகிறது'' என்று கூறினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (பொருட்காட்சி) திரு அ.ராஜமாணிக்கம் நன்றி நவின்றார்.

விழா முடிவில் காவல் துறையினரின் கரகம் மற்றும் காவடி நிகழ்ச்சி நடைபெற்றது.

## மகளிர் நாள்

அக்டோபர் திங்கள் ஐந்தாம் நாள் மகளிர் நாளாகக் கொண்டாடப்பட்டது. அண்ணல் காந்தியடிகளின் 119-வது பிறந்த நாளையொட்டி கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்ற தொடர்ச்சியான விழாக்களில் மிகச் சிறப்புடையதாக அமைந்திருந்தது.



சமூகநலத்துறை இயக்குநர் திருமதி ஷீலாராணி சுங்கத் இ.ஆ.ப., விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்குத் தலைமையேற்ற மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் உடல் ஊனமுற்றோருக்கு நல வாழ்வு உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி பா.வளர்மதி, திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி அரசு மணிமேகலை, திருமதி நிர்மலாசுரேஷ் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் பரதநாட்டிய நிகழ்ச்சியும், சவகர் சிறுவர் இல்லக்குழந்தைகள் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள், "எதிர்காலச் சமுதாயம் எப்படி உருவாகவேண்டும் என்பதற்கு ஆசிரியப் பெருமக்கள் திட்டம் தீட்டி அரசுக்குத் தர வேண்டும்" என்று கூறினார்.

அடுத்து உரையாற்றிய பள்ளிக் கல்வி இயக்குநர் திரு கி. கோபாலன், ''காந்தியடிகள் வலியுறுத்திய வாழ்க்கை நெறிகளை இளைஞர்கள் கடைப்பிடித்தால் அவர் வாழ்க்கையில் எப்படி சோபித்தாரோ அதே போல் இளைஞர்களும் சோபிக்க முடியும்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் டாக்டர் இரா. மாயாண்டி, ''காந்தியடிகள் காவி கட்டாத துறவியாக வாழ்ந்தார், பிறர் துன்பத்தைத் தமது துன்பமாக ஏற்றார்'' என்று குறிப்பிட்டார்.

வணிகவரித் துறை அமைச்சர் திரு த.இராமசாமி அவர்கள் தலைமையேற்றார்கள்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப வரவேற்றார்.

சட்டப்பேரவை உறுப்பினர் திரு ஏ.கே.ஏ. அப்துல்சமது, திரு கி.வா.ஜகந்நாதன், காவல் துறைத் தலைவர் திரு எஸ். ஸ்ரீபால், இ.கா.ப. ஆகியோரும் மற்றும் பலரும் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

சென்னையிலுள்ள சேவை நிறுவனங்களைச் சேர்ந்த பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.





## இளைஞர் நாள்

அக்டோபர் 6ஆம் நாள் இளைஞர் நாளாகக் கொண்டாடப்பட்டது.

பேராசிரியர் அ.காதர்பாட்சா வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைமை வகித்த மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் இளைஞர்களின் கடமை குறித்து வலியுறுத்திக் கூறினார். அப்போது அவர்,

''2வது உலகப் போரின் காரணமாக அவல நிலை எய்திய ஜப்பான் நாடு, இளைஞர்களின் அயராத பணியினால் உயர்ந்து எழுந்தது. அதுபோல நமது இந்திய நாடும் முன்னேற்றம் பெறுவதற்கு இளைஞர் சமுதாயம் பாடுபடவேண்டும்.'' என்றார்.

அடுத்து உரையாற்றிய செல்வி உலகநாயகி, ''காந்தியம் அன்புத் தத்துவம்; அறநெறி; ஆன்மீக நெறி'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய டாக்டர் சிலம்பொலி செல்லப்பன், ''கடல் அலை போலக் கட்டுக்குள் அடங்கி இருக்க வேண்டும் இளைஞர்கள்'' என்று குறிப்பிட்டார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு எம்.நடராஜன் நன்றி நவின்ற பின்னர், ஆர்.கே.எம்.சாரதா வித்தியாலயா மகளிர்மேனிலைப் பள்ளியினரின் 'காந்தி வாழ்க்கை வரலாறு' நாடக நிகழ்ச்சி நடைபெற்றது.

## தேசிய ஒருமைப்பாடு நாள்

அக்டோபர் ஏழாம் நாள் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு நாள் நிகழ்ச்சிக்கு மாண்புமிகு

**நிறைவுநாள்**

ஒருவார காலம் காந்தி மண்டபத்தில் நடைபெற்ற அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா நிறைவு நாள், அக்டோபர் 8 ஆம் நாளன்று மிகுந்த சிறப்போடு கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்ற செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.வி.டி.வீரப்பன் - இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தியாக தீபங்களுக்கு மட்டுமின்றி, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களுக்கும் தமிழ்நாடு அரசு பிறந்தநாள் விழா எடுப்பதைப் பெருமையோடு குறிப்பிட்டார்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் பேசுகையில்- ''அறவழிப் போராட்டங்களின்



மூலம் வன்முறையாளர்களையும் வென்றுவிட முடியும் என்பதை அவனிக்கு உணர்த்திய பெருமை அண்ணல் காந்தியடிகளுடையதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மதித்துப் போற்றப்படும் காந்தியடிகளுக்கு எடுக்கப்படும் இவ்விழாவிலே பங்கேற்பதில் பெருமை கொள்கிறேன்'' என்றார்.

''காந்தியடிகளால் தோற்றுவிக்கப்பட்ட கதரியக்கம், ஏழை, எளிய மக்களின் துயர் துடைப்பதாகும். அந்த உன்னதப் பணி உயர்வடைய எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்'' என்று காதி கிராமோத்யோக் பவன் நிர்வாகி திரு சி.டி.வி. இராகவுலு பேசும்போது கேட்டுக் கொண்டார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள் சிறப்புரையாற்றினார். ''காந்தியைத் திரைப்படத்தில் பார்த்த அமெரிக்கர்கள் இப்படியும் ஒரு மனிதர் வாழ்ந்தாரா என்று கேட்டார்கள். ஆம், அவரது வாழ்வில் ஒரு துளிதான் திரைப்படமாக்கப் பட்டிருக்கிறது என்றேன் நான். திரைப்படத்தில் இயேசுவைப் பார்த்துவிட்டு இப்படியும் ஒருவர் இருந்திருப்பாரா என்று நாங்கள் சந்தேகித்ததுண்டு; இப்போது அவரையும் நம்புகிறோம் என்றார்கள்'' என்று அவர் தமது உரையின்போது 'குறிப்பிட்டார்.

இவ்விழாவில் திருமதி வைஜயந்திமாலா பாலி எம்.பி. திரு. சைதை சா. துரைசாமி எம்.எல்.ஏ., ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களுக்குத் தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பரிசு வழங்கினார்.



விழா முடிவில் திருமதி கோவை கமலா இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன்பின் கடந்த ஆறு நாட்களும்போல் 'காந்தி' ஆங்கிலத் திரைப்படம் திரையிடப்பட்டது.



# அண்ணலின் அக்கறை

பிஞ்சுப் பருவத்தில் இந்திரா காந்தி ஒல்லியாக இருந்திருக்கிறார். அவர் மெலிவாக இருப்பதை எண்ணி, அண்ணல் காந்தியடிகள் கவலைப்பட்டிருக்கிறார். அவர் உடல் நலம் தேறிக் காட்சியளித்தபோது அண்ணல் பெருமகிழ்ச்சியடைந்திருக்கிறார்.

காந்தியடிகள் எரவாடா சிறையில் இருந்தபோது அங்கே சென்று அவரைப் பார்த்துவிட்டுத் திரும்பியிருக்கிறார் சிறுமி இந்திரா. அந்தச் செய்தியை நேருவுக்கு ஒரு தந்தியின் வாயிலாகத் தெரிவிக்க முனைந்த அண்ணல், ''இந்துவைப் பார்த்தேன். அவள் உடலில் அதிகமான சதையைக் கண்டேன். அவள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள்'' என்று குறிப்பிட்டார்.

* உலகம் முழுவதும் ஒரு குடும்பமே என்னும் உணர்வுடன் வாழ வேண்டும். இந்தக் கருத்தை இளவயதிலேயே குழந்தைகளின் மனத்தில் பதிக்கச் செய்ய வேண்டியது அவசியம்.

* கல்வியின் பலன், பெருந்திரளான மக்களுக்குப் போய்ச் சேருவதோடு, பின் தங்கிய மற்றும் அடித்தட்டு மக்களின் நிலையை மேம்படுத்துவதாகவும் இருந்தால்தான் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

திருமதி இந்திரா காந்தி





# நாடு போற்றும் நாமக்கல் கவிஞர்

தமிழ்நாடு அரசின் சார்பில் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் அவர்களின் நூற்றாண்டு தொடக்கவிழா அவர் பிறந்த நாளான 19-10-87 அன்று அவர் பிறந்த ஊரான நாமக்கல்லில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

19-10-87 அன்று காலை நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி கலையரங்கில் நாமக்கல் வேணுகோபால் நாதமணி குழுவினரின் கிளாரினெட் இசையுடன் விழா துவங்கியது. முதல் நிகழ்ச்சியாக, கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்தவர்களைக் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ம. குற்றாலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார். கருத்தரங்கத்தில் மாண்புமிகு திட்டக்குழு துணைத் தலைவர் பாவலர் மா.முத்துசாமி அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார். திரு. சாது சாரங்கபாணி அவர்கள் நாமக்கல்கவிஞர் பற்றிய நீண்ட உரையினை நிகழ்த்தினார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் திருமதி திலகவதி, நாமக்கல் கவிஞரின் நண்பர் திரு மாரப்பன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

திருமதி சௌந்தராகைலாசம் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கில் திரு செந்தமிழ் மாறன், திரு. நாமக்கல்நாதன், திரு. மணமேடு குருநாதன், திரு. ப. முத்துசாமி மற்றும் நாமக்கல் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவி ஆகியோர் நாமக்கல் கவிஞர் பற்றி கவிதை பாடினார்கள். கவியரங்கம் மற்றும் கருத்தரங்க முடிவில் கோட்டாட்சித் தலைவர் திரு.கி. தனவேல் நன்றி நவின்றார்.

அன்று மாலை, நாமக்கல் அரசினர் மகளிர் உயர் நிலைப்பள்ளியில் இருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் பள்ளி மாணவ மாணவியர், என்.சி.சி. நேரு இளைஞர் மன்ற இளைஞர்கள் கலந்து கொண்டனர். கும்மி, கோலாட்டம், கிராமியக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுடன் நாமக்கல் நகரைச் சுற்றி சுமார் 1 மைல் தூரம் இந்த ஊர்வலம் சென்றது. அடை மழையையும் பொருட்படுத்தாது பள்ளி மாணவ மாணவிகள் ஊர்வலத்தில் பங்கேற்றனர். ஊர்வலத்தில் சுமார் 7,000 பேர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தை மாண்புமிகு பாவலர் மா முத்துசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம். எப். பாரூக்கி, இ.ஆ.ப., செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. ஆகியோர் பார்வையிட்டனர்.

நகராட்சி நகர்மன்றத்தில் பின்னர் நடைபெற்ற சிறப்புக் கூட்டத், துவக்கத்தில் கல்லூரி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கவிஞரைப் புகழ்ந்தேத்தும் நாடகம், தனி நடனம், வில்லுப்பாட்டு, முழு நடனம் ஆகியவை இந்நிகழ்ச்சியில் இடம் பெற்றன. கூட்டத்திற்கு வருகை புரிந்தவர்களை செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தர பாண்டியன், இ.ஆ.ப அவர்கள் வரவேற்று கவிஞரின் சேவைகளைப் போற்றிப் பேசினார். அடை மழையையும் பொருட்படுத்தாது ஊர்வலத்தில் கலந்து கொண்ட பள்ளி, கல்லூரி மாணவ - மாணவியர் - ஆசிரியர்களுக்கு நற்சான்று வழங்கப்படும் என்றும் அவர் தமது உரையில் அறிவித்தார்.

அரசு நலத் திட்டம் குறித்தும், நாமக்கல் கவிஞர் அவர்களின் சிறப்பு குறித்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.எப். பாருக்கி, இ.ஆ.ப., அவர்கள் உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து, தமிழக அரசு கவிஞர்களுக்கு ஆற்றிவரும் தொண்டு பற்றிவிளக்கி கவிஞர் அவர்களின் சிலையினை நாமக்கல்லில் நிறுவ விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்றும், நூற்றாண்டு விழா இறுதியில் நாமக்கல்லில் அவர் வாழ்ந்த வீட்டினை நினைவு இல்லமாக அரசு ஏற்கும் என்றும் கூறினார்.

விழாவில் பாவலர் முத்துசாமி, கவிஞரின் மகன் திரு. இரா. அமிர்தலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு இரா. அருணாசலம், திரு. பி. செங்கோட்டையன் உட்பட பலர் உரை நிகழ்த்தினார்கள். விழாவில் நலிவடைந்த பிரிவினருக்கு வீட்டு மனைப்பட்டா, மற்றும் அரசு நல உதவிகளை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

''நாடு போற்றும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்'' என்ற சிறு நூல், செய்தி - மக்கள் தொடர்புத்துறை சார்பில் வெளியிடப்பட்டு, பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன், அவர்கள் நன்றி கூறினார்.

விழாவின் இறுதியில் அண்ணா போக்குவரத்துக் கழக இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. விழா நாளன்று நாமக்கல் நகரமே விழாக்கோலம் பூண்ட வகையில் நகரில் வரவேற்பு வளைவுகள், ஒளிவிளக்குகள், மின் வளைவுகள் அலங்காரத் தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

வளரும் தமிழ்நாடு



# தொழிலாளரும் சமுதாயமும்

மாண்புமிகு உணவு மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**திரு எஸ். இராமச்சந்திரன்**

சமவாழ்வுச் சமுதாயமே எனது குறிக்கோள். இவ்வாழ்வும் உழைப்பின் அடிப்படையிலேயே அமைய வேண்டுமே தவிர, உடைமை அடிப்படையில் அல்ல. இதனையே பாரதியார்,

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்'

என்றார். 'உழைப்போரே உயர்ந்தவர்' எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார் நமது தமிழக முதல்வர்.

அனைவரும் இங்கே தொழிலாளியாக அமையும் சமுதாயத்தை உருவாக்க, உழைக்கும் தொழிலாளர்க்கு ஊக்கமளிப்பது அரசின் கடமையாகும். நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே தொழில் தகராறுகள் ஏற்படுகிறபோது இருதரப்பாருக்கும்இடையே சுமுகமாக உடன்பாடு ஏற்படுத்துவதிலும், மாநிலத்தில் தொழில் அமைதியைக் காப்பதிலும், மாநிலத்தின் தொழிலாளர் துறை, பெரும்பங்கு வகிக்கிறது. இவ்வகையில் தமிழ்நாடு நல்ல தொழில் இணக்கச் சூழலைப் பெற்றிருப்பதுடன், தொழில் உறவும் தொடர்ந்து நீடித்திருக்கும் நிலையையும் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் தொழிலாளர் துறையின் முயற்சியும், நிர்வாகமும் தொழிலாளர் இயக்கங்களும் கொண்டுள்ள சமூக உணர்வுமேயாகும்.

1977ஆம் ஆண்டில் 8,508 ஆக இருந்த தொழிற்சாலைகள் இன்று 13,496 ஆகப் பெருகியுள்ளன. இத்தொழிற்சாலைகளில் 8,11,936 தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். இதைத்தவிர கடைகள், நிறுவனங்கள், உணவு விடுதிகள், பீடித் தொழில் நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்களில் 5,42,831 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

கடந்த ஆண்டில், 8,076 தொழில் தகராறுகள் இந்தத் துறையால் பெறப்பட்டன. 8,112 தொழில் தகராறுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. தொழிலாளர் துறையைச் சேர்ந்த சமரச அலுவலர்கள் முயற்சிகளின் காரணமாக எண்பது விழுக்காடுக்கும் மேற்பட்ட தொழில் தகராறுகள் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு இது வரை 3,948 தொழில் தகராறுகள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றில் 3,850 தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டுள்ளன. தற்பொழுது தமிழ்நாட்டில் 23 வேலை நிறுத்தங்கள்-கதவடைப்புகளதான் நடைபெற்று வருகின்றன. இவற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 6,384 மட்டுமே. இந்த நாட்டிலுள்ள மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கையை நோக்குமிடத்து இந்த வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு என்

11

ணிக்கையும், அதனால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவே ஆகும்.

மேலும், மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அரசு இதுவரை 48,45,600 ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. இந்த நிவாரணத் தொகையில் 26 இலட்சம் ரூபாய் சென்னை பி & சி மில் நிறுவனம் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட 13,000 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முறைப்படுத்தப்பட்ட தொழில்களில் உள்ள தொழிலாளர்கள் நலத்தைப் பாதுகாக்க எடுக்கப்படுகிற நடவடிக்கை அல்லாமல் முறைப்படுத்தப்படாத தொழில்களில் ஈடுபட்டுள்ள பெரும் எண்ணிக்கையுள்ள தொழிலாளர் நலனிலும் இவ்வரசு அக்கறை கொண்டுள்ளது. குறிப்பாக, பெரும் எண்ணிக்கை கொண்ட கைத்தறித் தொழிலாளர்கள் நலனைப் பாதுகாப்பதற்கென்று, அரசு 1981ஆம் ஆண்டில், ''தமிழ்நாட்டு கைத்தறித் தொழிலாளர் (வேலை நிலைமை மற்றும் இதர விதிகள்) சட்டம்'' என்ற சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இந்தச் சட்டம் தறிக்காரர்கள் மற்றும் கைத்தறித் தொழிலாளர்களுக்கிடையே நல்ல தொழில் உறவை வளர்க்கவும், சம்பளம் பணித்தொடர்ச்சி மற்றும் நல்வாழ்வுச் சலுகைகள் கிடைக்கவும் வழி செய்கிறது. **இவ்வகைச் சட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டிலேதான் இயற்றப்பட்டுள்ளது.**

உடல் உழைப்புத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக, ''தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் (பணி நிலைமைகள் ஒழுங்குபடுத்தும்) சட்டம்'' 1982ஆம் ஆண்டு இவ்வரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவற்றோடு கூட இந்த அரசு, கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் நலனுக்கென ஒரு தனிச்சட்டம் இயற்றியுள்ளது. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள முறைப்படுத்தப்படாத தொழில் வகையைச் சேர்ந்த பலருக்கு இது ஒரு பெரும் பயன் அளிக்கும் சட்டம் ஆகும்.

தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இதுவரை அவர்கள் மேற்கண்ட நிறுவனங்களில் பணியாற்றிய காலம், அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எவ்விதச் சான்றும் அவர்களிடம் இல்லை. ஆதலால் அவர்களால் சட்டப்படி பெறவேண்டிய சலுகைகளைச் சரிவரப் பெறமுடியவில்லை. இந்நிலைமையை மாற்றும் வகையில் இவ்வரசு அவ்வகைத் தொழிலாளர்களுக்கும் மேற்படி நிறுவனங்கள் பணிச்சீட்டு / நேர அட்டை கட்டாயமாக வழங்கும் அளவில் பல்வேறு சட்டங்களுக்குத் திருத்தம் கொண்டுவந்துள்ளது.

குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின்படி, தொழிலாளர்கள் குறைந்த பட்சக் கூலி பெறுவதிலும் இவ்வரசு கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. இந்தச் சட்டத்தின்கீழ் அரசு 1977-ஆம் ஆண்டுக்குப் பின்பு 23 தொழில்களை, குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்த்துள்ளது. இதன்மூலம் முறைப்படுத்தப்படாத தொழில் இனத்தைச் சேர்ந்த பல தொழிலாளர்கள் பயனடைவர்.

மேலும், பாரம் ஏற்றி இறக்கும் தொழில் ஆட்டோமொபைல் பணிமனை, அச்சுத் தொழில், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை மோட்டார் தொழில் உள்ளிட்ட 17 தொழில்களுக்கு முதன்முதலாக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்துள்ளது. விலைவாசிப் புள்ளி விவரங்களுக்கேற்பப்பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பல தொழிலாளர்கள் குறைந்தபட்சக் கூலி பெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்த பட்சக் கூலியை அவ்வப்போது திருத்தியமைத்து வருகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாக, தொழிலாளர் நலன் காத்துவருகிறது நமது அரசு. தொழிலாளர்கள் மனைவி மற்றும் குழந்தைகள் நலனுக்காக இவ்வாரியம் மாநிலம் முழுவதுமாக 51 தொழிலாளர் நல மையங்களை, பல தொழில் நகரங்களில் நிறுவியுள்ளது. இங்கே தையல் வகுப்புகளும், இளஞ்சிறார் பள்ளிகளும் நடைபெறுகின்றன. தொழிலாளர், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்கவும், அவர்கள் நாட்டின் நடப்புகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையிலும் சென்னை, செங்கை, மதுரை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் 15 படிப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொழிலாளர்கள், அவர்களின் துணைவியர்கள் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயில இவ்வாரியம் உதவித்தொகை வழங்குகிறது. 1986-87ல் 964 பேருக்கு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1,07,568 ரூபாய் வழங்கியுள்ளது. மேலும் இவ்வாரியம் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளில் 75 பேர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 300 என்ற விகிதத்தில் உதவித்தொகை அளித்து வருகிறது.

பொறியியல், மருத்துவம் மற்றும் சட்டப்படிப்பு பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஆண்டுக்கு உதவித்தொகை ரூ. 1000 என்ற அளவில் 5 ஆண்டுக் காலத்திற்கு 25பேருக்கு உதவித்தொகை வழங்கிவருகிறது. இதுவே பட்டயப்படிப்பு (டிப்ளமா) பயிலும் பிள்ளைகளுக்கு ஆண்டிற்கு ரூ. 600 வீதம் 3

## குழந்தைத் தொழிலாளர் 3 அம்சக் கொள்கை

குழந்தைத் தொழிலாளர் நலனுக்காக மத்திய அரசு 3 அம்சக் கொள்கை ஒன்றினை அறிவித்துள்ளது.

3 அம்சக் கொள்கையின் கூறுகள் பின்வருமாறு: 1) சட்ட பூர்வ நடவடிக்கைத் திட்டம், 2) குழந்தைத் தொழிலாளர் மற்றும் அவர்கள் குடும்பத்திற்கான பொது மேம்பாட்டுத் திட்டங்கள் 3) திட்ட அடிப்படையிலான நடவடிக்கை.

# முத்துவின் முன்னேற்றத்தின் இரகசியம்




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

**இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

ஆண்டுக் காலத்திற்கு 1875 பேர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மேலும் உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒன்ப தாம் வகுப்பு முதல் இறுதிக் கல்வி வகுப்பு வரை 16,125 பேர்களுக்கு ரூ. 6,10,550 உதவித்தொகையாக கடந்த ஆண்டு வழங்கப் பட்டுள்ளது.

தாம்பரத்தில் உள்ள காசநோய் மருத் துவமனையில் தொழிலாளர்களுக்கெனத் தனி யாக 26 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு ரூ. 3.64 லட்சம் செலவில் கட்டப்பட்டு, நடத்தப்பட்டு வருகிறது. திருப்பூர், பென் னாத்தூர் அரசு பொதுமருத்துவ மனைகளி லும் ஆச்சாரி பள்ளத்திலும், காசநோய் நலப் பிரிவு கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

சுற்றுலா செல்லும் தொழிலாளர்களுக் கும் அவரது குடும்பத்தினருக்கும் குறைந்த செலவில் தங்கும் வகையில் குற்றாலத்தில் விடுமுறை இல்லம் கட்டப்பட்டுள்ளது. மற் றொரு விடுமுறை இல்லம் மாமல்லபுரத்தில் கட்டப்பட்டு விரைவில் திறக்கப்பட இருக் கிறது. உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம், ஒகனேக்கல் ஆகிய இடங் களிலும் விடுமுறை இல்லங்கள் கட்டத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத் தொழிலாளர்களுக்கென விபத்துக்குள்ளானால் நிதி உதவி பெறும் திட் டம் ஒன்றையும் அரசு செயல்படுத்தி வரு கிறது.

காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் தனிச் சலுகைத் திட்டம் ஒன்று அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் 1984-ஆம் ஆண்டு முதல் அமுலாக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், வண்டியிழுப்போர், சல வைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் போன்றோர்களுக்கு, அவர்களின் 58வது வயதில் காப்பூதியம் மற்றும் ஓய்வூதியம் கிடைக்க வகை செய்கிறது.

பணியாற்றும் சிறார்களின் நிலை மையை மேம்படுத்தவும், அவர்களுக்குச் சத் துணவும், அடிப்படைக் கல்வி வசதியும், சுகாதார வசதியும் அளிக்கவும், முன்னோடி திட்டமாக தேசிய குழந்தை தொழிலாளர் நலத்திட்டம் ஒன்று, மத்திய அரசின் நிதி யுதவியுடன் சிவகாசியில் 1986ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 13,89 கோடி செலவில் 3 ஆண்டுக்கால அள வில் செயல்படுத்தப்படும்.

மேலே கூறப்பட்ட அநேக சட்டங்களும், தொழிலாளர் நலத்திட்டங்களும் முன்னேறி வரும் தொழிலாளர் சமுதாயத்திற்கு நலம் பயப்பவையாகும். உழைப்போரை ஊக்கு வித்து, உற்பத்தியைப் பெருக்கி, வன்முறை யற்ற நன்முறையில் வளர்ச்சி காண்போமாக, 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்று வள்ளுவன் காட்டிய வழியில் பகுத்துண்ணும் பகுத்தறிவுச் சமுதாயத்தைப் படைப்போம் வாரீர்!

**(19.10.87 அன்று வானொலியில் ஆற்றிய உரை)**

# பிற்படுத்தப்பட்டோர் நலன்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆரம் பிக்கப்பட்ட நாளிலிருந்து சிதம்பரனார் மாவட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு வரை இம் மாவட்டத்தில் 74 இலவச வீட்டுமனைகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. இவ்வாண் டில் மட்டும் ரூ. 50483.80 செலவில் 38 பேருக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கப் படுவதற்கு 2.25 ஏக்கர் நிலம் கையகப்படுத் தப்பட்டுள்ளது.

**இலவச தொழிற் கருவிகள்**

பிற்படுத்தப்பட்ட சலவையாளர் வகுப்பினர் களில் தகுதி வாய்ந்த 100 குடும்பங்களுக்குச் சுமார் ரூ. 40,000 - மதிப்புள்ள 100 சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கல்வித் தொகை**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபி னர் மாணவ மாணவியர்களில் தகுதி வாய்ந்த 8792 பிற்படுத்தப்பட்ட மாணவர் மாணவி யர்களுக்கு ரூ. 1678259.25 வழங்கப்பட்டுள் ளது.

1986ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் (எஸ். எஸ்.எல்.சி.) மாநிலத்தில் அதிக மதிப்பெண் கள் பெற்று தேர்ச்சி பெற்ற பிற்படுத்தப் பட்ட வகுப்பு மாணவி, செல்வி. பெலிசியா இராஜசேகரனுக்கு முதல் பரிசாக ரூ. 500- வழங்கப்பட்டது.

**அரசு மாணவர் மாணவியர் விடுதிகள்**

இம்மாவட்டத்தில் பிற்படுத்தப்பட் டோர் நலத்துறைமூலம் ஒரு கல்லூரி மாண வர் விடுதியும், 10 மாணவர் விடுதியும், 5 மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் 1045 மாணவர் மாணவியர் தங்கிப் படிக்க வசதிகள் செய்து கொடுக்கப் படுகின்றன. அவர்களுக்குச் சென்ற ஆண்டில் வழங்கப்பட்ட உணவு, சீருடைகள் மற்றும் தங்கும் வசதிக்காக ரூ. 13,59,453.50 செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 200 மாணவர் மாணவி யர்களைச் சேர்ப்பதற்காக 3 மாணவியர் விடு திகளையும், 1 மாணவர் விடுதியையும் கூடுத லாகத் திறப்பதற்கு அரசினால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**பள்ளி**

தூத்துக்குடி வட்டம் சங்கரபேரியில் சர்ம மரபினர் அரசு ஆதாரப் பள்ளியில் 76 மாண வர் மாணவியர் பயின்று வருகின்றனர். மூன்று ஆசிரியர்கள் உள்ளனர். இப்பள்ளி மாணவர் களுக்குச் சீருடைகள் மதிய உணவு முதலியன வற்றிற்காக ரூ. 88000 - செலவு செய்யப் பட்டுள்ளது.

# புகழ்க்கொடி நாட்டிய

# இரட்டையர்கள்



ஆர்க்காட்டு இரட்டையர்கள் என்று புகழ்பெற்ற சர்.ஏ.இராமசாமி முதலியார் - சர்.ஏ. இலட்சுமணசாமி முதலியார் ஆகியோரின் நூற்றாண்டு விழா 1987 அக்டோபர் 14 ஆம் நாளன்று காலை கலைவாணர் அரங்கில். திருப்பனந்தாள் பாலசுப்பிரமணியம் குழுவினரின் நாயன இசையுடன் தொடக்கமாகியது.

வரவேற்புரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா.கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப. தெரிவித்தார்:

''மூத்தவர் டாக்டர் இராமசாமி முதலியார் அரசியல் வானில் ஒளிவிளக்கு. இளையவர் இலட்சுமணசாமி முதலியார் மருத்துவத்துறைக்கொரு மாமணி. ஆட்சித் துறையில் அரிய சாதனைகளைப் படைத்தவர் மூத்தவர். கல்வித் துறைக்கே கலங்கரை விளக்கமாக விளங்கியவர் இளையவர்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் ஜெகந்நாத ரெட்டி குறிப்பிட்டார்:

''ஆர்க்காட்டு இரட்டையர்களுக்கு இணையாக இரட்டையர் இதுவரை தோன்றவில்லை.

''இலட்சுமணசாமி முதலியார் மருத்துவக் கல்லூரியில் பணியாற்றிவந்த காலத்தில் அவரது வகுப்பென்றால் மாணவர்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் வகுப்பறைக்கு வந்துவிடுவார்கள். அவரது காலத்தில் சென்னை மருத்துவமனையில் மாணவர்களுக்குப் பல்வேறு வசதிகள் உருவாக்கப்பட்டன.''

அடுத்து உரையாற்றிய திரு. சித்ரா நாராயணசாமி தெரிவித்ததாவது:

''ஆர்க்காட்டு இரட்டையர்கள் சரளமாகவும் பிறர் ஏற்றுக்கொள்ளும் விதத்திலும் உரையாற்றும் ஆற்றல் பெற்றிருந்தனர்.''

அடுத்து உரையாற்றிய திரு வேதகிரி சண்முக சுந்தரம் குறிப்பிட்டார்:

''ஆங்கிலேயர்களுடன் போட்டி போட்டு மருத்துவக் கல்லூரித் தலைவர் ஆனார் லட்சுமணசாமி முதலியார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திற்குச் சென்று அங்கு ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றியிருக்கிறார். இருவரில், லட்சுமணசாமி முதலியாருக்குச் சிலை உள்ளது. இராமசாமி முதலியாருக்குச் சிலை ஏற்படுத்தப்படவில்லை.

''அவருக்கும் சிலை வைப்பதற்குப் பொதுமக்கள் முன்வர வேண்டும். அந்த வகையில் நிதியாக நான் 1008 ரூபாய் இப்போது தருகிறேன்''.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்களிடம் இந்தத் தொகையை வழங்கினார்.

அடுத்து உரையாற்றிய டாக்டர் தம்பையா குறிப்பிட்டார்:

''இரட்டையர்கள் எந்தப் பணியிலும் தீவிர ஈடுபாடும், நிர்வாகத் திறனும் கொண்டு விளங்கினார்கள். நமது சென்னை மருத்துவத்துறை மற்ற மாநிலங்களைவிடச் சிறந்து விளங்குவதற்கு இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் ஆற்றிய ஈடு இணையற்ற தொண்டுதான் காரணம்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் மால்கம் ஆதி சேஷய்யா தெரிவித்தார்:

''இராமரும் இலட்சுமணரும் வாழ்ந்ததாகச் சரித்திரம் சொல்கிறது. நமது காலத்தில் ஒரு இராமரையும், இலட்சுமணரையும் காண்கின்ற வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது.

''இராமசாமி முதலியார் அவர்களின் முயற்சியால் பாரத நாடே தொழில் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. அவர் அமைத்த அடித்தளத்தின் காரணமாகத் தான் இன்று நமது நாடு உலகில் தொழில் வளர்ச்சியில் 10 ஆவது நாடாகத் திகழ்கிறது.

''இலட்சுமணசாமி முதலியார் அவர்களின் தொண்டினால் நமது தமிழகத்தில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மருத்துவத் துறை வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

''உலக நாடுகளுக்கே ஆலோசனைகளை வழங்கியவர்கள் ஆர்க்காட்டு இரட்டையர்கள்.''

அடுத்துப்பேசிய டாக்டர் இரத்தினவேல் சுப்ரமணியம் கூறினார்:

''மாணவர்களிடையே பெரும் மதிப்பைப் பெற்றவர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார்.

''கல்லூரியின் வருங்காலத் தூண்கள் நீங்கள்'' என்று மாணவர்களிடம் தெரிவித்து அவர்களை ஊக்குவித்து வருவார். எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் உரையாற்றும் திறமை பெற்றவர் அவர்.

''மகப்பேற்று மருத்துவத்தில் பற்பல சிக்கல்களுக்கு மிக எளிதாகத் தீர்வு கண்டவர் அவர்.''

அடுத்து திரு எம்.வி. அருணாசலம் தமது உரையில் குறிப்பிட்டார்:

''ஒரு முறை ஐநாவிலே ஒரு குழுவுக்கு United Nations Economical Social Council என்று பெயர் வைப்பதா, Socio Economical Council என்று பெயர் வைப்பதா என்பது குறித்துப் பலரும் உரையாற்றினர். இறுதியாக Economical Social Council என்றுதான் பெயர் சூட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுவிட்டு அதற்கு ஆதாரமாக, ரூசோ சொல்லிய Liberty, Equality, Federality என்பதைச் சான்று காண்பித்தார் டாக்டர் ஏ.இராமசாமி முதலியார்.

''ரூசோ சொன்ன Liberty என்பது சமுகத்திற்கு உரிய பொருளாதார உரிமையையும், Equality என்பது ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தையும் வலியுறுத்துகின்றன. அதனால் Economical Social Culture என்று பெயரிடுவது தான் பொருந்தும் என்று தெரிவித்ததிலிருந்தே அவரது மேதை விளங்குகிறது.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் வா.செ. குழந்தைசாமி தெரிவித்தார்:

''ஆர்க்காட்டு சகோதரர்கள் மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்கள்.

''எளிய குடும்பத்தில் பிறந்து, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டவர்கள், அல்லும் பகலும் அயராது பாடுபட்டு மேன்மையடைந்தவர்கள். தாங்கள் ஏற்றுக் கொண்ட துறை எதுவாக இருந்தாலும், அதில் பற்றுக் கொண்டு உழைத்தவர்கள்.''

பின்னர், ஆர்க்காட்டு இரட்டையர்களின் உருவப்படம் வெளியிடப்பட்டுள்ள அஞ்சலக உறை, அஞ்சலக முத்திரை கொண்ட தொகுப்பினைத் தமிழக அஞ்சல் துறைத் தலைவர் திரு. ரங்கசாமி மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோரிடம் வழங்கினார்.

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு கல்வி, சட்டத் துறை அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாட்டில் - குறிப்பாக தென்னாட்டில் நலிந்த பிரிவினரின் மேம்பாட்டுக்குப் பாடுபட்ட செம்மல்கள் ஆர்க்காட்டு இரட்டையர்கள்.

''தென் இந்திய நல உரிமைக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, நமது மக்கள் ஒவ்வொரு துறையிலும் உரிய பங்கைப் பெறுவதற்குப் பாடுபட்டார் இராமசாமி முதலியார். ஆங்கிலேய அரசுக் காலத்தில் நமது இந்தியாவின் பெருமையை





உலக நாடுகள் உணர்வதற்கும் அவர் பாடுபட்டார்.

''ஐ.நா சபை துவக்கப்பட்டபோது இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்று ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றுவதற்கு உரிய திறமை அந்நாளில் அவருக்கு மட்டுமே இருந்தது.

''அறிவியல் தொழில் நுட்பத் துறையை அவர்தான் தொடங்கி வைத்தார். அறிவியல் துறையில் நலம் பெற்றால்தான் சமுதாய மறுமலர்ச்சி, பொருளாதார மறுமலர்ச்சி ஆகியவற்றைப் பெற முடியும் என்று அவர் கருதினார்.

''இலட்சுமணசாமி முதலியார் குறிப்பிடத் தகுந்த மகப்பேறு மருத்துவராகத் திகழ்ந்தார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் - மகப்பேற்றுப் பிரச்சினைக்காக இலட்சுமணசாமி முதலியாரைச் சந்திக்க வந்தனர். மகப்பேற்றுத் துறையில் அவருக்கு நிகர் அவரேதான்.

''விடாமுயற்சி - கடின உழைப்பு அவரது வெற்றிக்கு அடிப்படையாகத் திகழ்ந்தன; அச்சாணிகளாக விளங்கின.''

விழாவைத் தொடங்கி வைத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.ப.உ.சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்:

''நான், பல வருடங்களுக்கு முன்னால் பொள்ளாச்சியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கு கொள்ளச் சென்றபோது கோவைக்குச் சென்றிருந்தேன். அங்கு ஜி.டி.நாயுடு அவர்களைச் சந்தித்தேன். அப்போது இராமசாமி முதலியார் அங்கு வந்திருந்தார்.

''தனது வரி கட்டும் விவகாரம் குறித்து இந்திய அரசுக்கு 110 வினாக்கள் கொண்ட கடிதத்தை எழுதியனுப்பியிருப்பதாகச் சொன்னார் ஜி.டி.நாயுடு.

''உடனே, 'நான் மட்டும் அரசாங்கத்தில் பணிபுரிந்தால் உங்களது கேள்விகளுக்கு ஒரே வரியில் பதில் சொல்லி விடுவேன்' என்று சொன்னார் இராமசாமி முதலியார்.'

''ஜி.டி.நாயுடு, 'அப்படி என்ன பதில் சொல்லி விடுவீர்கள்?' என்று கேட்டார்.

''எந்த வகையில் நீங்கள் பணம் சம்பாதித்தீர்கள் என்பதைச் சொல்லுங்கள்!, நான் அதற்கு வரி உண்டா இல்லையா என்பதைச் சொல்லிவிடுகிறேன் என்றார் இராமசாமி முதலியார்.



''காஷ்மீர் பிரச்சினை குறித்து ஐ.நா.வில் பேச வேண்டியிருந்த போது, இராமசாமி முதலியாரை அனுப்ப வேண்டும் என்று ராஜாஜி அவர்கள் தெரிவித்தார்கள். அதன்படி இராமசாமி முதலியார் அங்கு அனுப்பப்பட்டார். வெற்றிகரமான முறையிலே உரையாற்றினார்.

''நானும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் எங்களின் இந்த மாதச் சம்பளப் பணத்தைச் சிலை நிதிக்கு வழங்குவதற்கு முடிவு செய்திருக்கிறோம்''

செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வி.டி.வீரப்பன் நன்றி உரையுடன் காலை நிகழ்ச்சி முடிவுற்றது.



தொடக்கத்தில், ஆர்க்காட்டு இரட்டையர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. பொன்னையன் திறந்து வைத்தார்.

அன்று மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திருஇரா.கற்பூர சுந்தரபாண்டியன், இ. ஆ. ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவிற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''ஆர்க்காட்டு இரட்டையர்களான இவர்கள் வைரமணிகளாகத் திகழ்ந்தவர்கள். இவர்களால் தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவே புகழ்பெற்றது.

''டாக்டர் இராமசாமி முதலியார் சட்டத்துறையில் புகுந்து வழக்கறிஞராக ஆனவர். அரசியலிலும் ஈடுபட்டார். நீதிக்கட்சியின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். நீதிக்கட்சிப் பத்திரிகை ஆசிரியராகத் திகழ்ந்தவர். கொச்சியில் திவானாகவும், திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் 1951 முதல் 1959 வரை துணைவேந்தராகவும் பணியாற்றியவர்.

''டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் மருத்துவத் துறையில் சிறந்து விளங்கியவர். சென்னை பல்கலைக் கழகத்தில் 1942 முதல் 1969ஆம் ஆண்டு வரை 27 ஆண்டுகள் துணைவேந்தராகத் தொண்டு செய்தவர். இவ்வளவு காலம் துணைவேந்தராக இருந்தவர்கள் உலகில் யாரும் கிடையாது.''

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள், டாக்டர் ஏ. இராமசாமி முதலியார், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்துப் பேசுகையில்-

''டாக்டர் இராமசாமி முதலியாரும், டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரும் கடுமையாக உழைத்து, மிக உயர்ந்த பதவிகளைப் பெற்று வாழ்ந்த இந்தியாவின் தவப் புதல்வர்கள் ஆவார்கள். இரட்டையர்களாகப் பிறந்த இருவரும் கல்வியில் சிறந்து விளங்கினார்கள். அவர்களுடைய வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது'' என்றார்.

பிறகு, 'அகிலம் போற்றும் ஆர்க்காட்டு இரட்டையர்கள்' என்னும் நூலை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட, மேதகு ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் பேசுகையில், ஆர்க்காட்டு இரட்டையர்களின் சாதனைகள் பற்றிக் கவிதை பாடினார்.

திரு ஏ.கே.ஏ.அப்துல் சமது எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், ''இருவரும் பிறந்த நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தவர்கள். தொட்டதெல்லாம் துலங்கச் செய்யக்கூடிய பேரறிஞர்களாக விளங்கியவர்கள்'' என்றார்.

முன்னாள் அமைச்சர் திரு.சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''இந்த நூற்றாண்டு விழாவோடு நின்று விடாமல், தொடர்ந்து பல்வேறு திட்டங்கள் வரவேண்டும். இதனால் வருகிற தலைமுறை பயன்பட வேண்டும்'' என்றார்.

நீதிபதி திரு பி. வேணுகோபால் அவர்கள் பேசுகையில், ''இராமசாமி முதலியாருக்கு டெல்லியில் சிலை வைக்காவிட்டாலும், அவர் உருவாக்கிக் கொடுத்த சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும். அதுவே அவருக்கு ஏற்படுத்தும் நினைவுச் சின்னம் ஆகும்'' என்றார்.

திரு டி.செங்கல்வராயன் பேசுகையில் ''தமிழக அரசு முதல்வர் எம்.ஜி.ஆர் தலைமையில் இப்படிப்பட்ட விழாக்களை எடுத்து வருவதைப் பாராட்டுகிறேன். நம்முடைய முன்னோர்களை நினைவுபடுத்தும் வண்ணம்-வருங்காலச் சமுதாயம் அறிந்து கொள்ளும் வண்ணம்-சிறந்த முறையில் அரசு விழாக்களை நடத்தி வருகின்றது'' என்று கூறி இரட்டையர்களின் தொண்டுகளை விளக்கினார்.

முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் பேசுகையில், சான்றோர்களுக்குத் தமிழக அரசு விழா எடுத்து வருவதைப் பாராட்டினார். இந்தப் பணி தொடர்ந்து நடைபெற வாழ்த்துக் கூறினார்.''இரட்டையர்கள் பொதுவாழ்வில் தூய்மையாக நடந்து கொண்டார்கள் என்றும், அவர்கள் பிறவியில் மட்டும் இரட்டையர்களாக விளங்கவில்லை, அறிவு, ஆற்றல், திறமை, அத்தனையிலும் இரட்டையர்களாக விளங்கினார்கள்'' என்றும் புகழாரம் சூட்டினார்.

விழாத் தொடக்கத்தில் கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகத்தின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், கலைமாமணி சீர்காழி எஸ். கோவிந்தராஜன் இசைநிகழ்ச்சியும் நடந்தன.

முடிவில், செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்



# வன உயிரினங்கள் வாழ...



ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் வாரம் வன உயிரின வாரம் கொண்டாடப் படுகிறது. இந்த விழா வனத் துறையால் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு சென்னை கலைவாணர் அரங்கில் 1.10.87 அன்று கொண்டாடப்பட்டது.

தமிழக வனத்துறைத் தலைவர் திரு ச. ஜான்ஜோசப் இ.வ.ப., அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு, மின்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது: ''மனிதனைப்போல எந்த மிருகமும் தற்கொலை செய்து கொள்வதில்லை. தற்கொலை செய்து கொள்ளக்கூடாது என்பது மட்டுமல்ல. வேறு நல்ல பாடங்களையும் மிருகங்களிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

''சர்வதேச வனவிலங்குஆராய்ச்சியாளர்கள் மிருகங்கள் வாழ ஒவ்வொரு நாட்டிலும் மொத்தக் காட்டுப்பகுதிகளில 8% காடு ஒதுக்க வேணடும் என்று ஆலோசனை கூறியுள்ளனர். ஆனால தமிழகத்தில் 10% காடு ஒதுக்கப்பட்டுள்ளது.

''வனவிலங்குகள் பராமரிப்புக்கு இந்த ஆண்டு ரூ. 3 கோடியே 21 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வண்டலூர் மிருகக் காட்சிச்சாலைக்குப்புதுவகையின மிருகங்கள் கொண்டுவரப்பட உள்ளன.''

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் உயிரின வார விழாவைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறியதாவது,

''இந்தியா விடுதலை பெற்றபோது பல வன விலங்குகள் இருந்தன. தற்போது 500 வகை மிருகங்கள் இரண்டாயிரம்வகை பறவைகள் மட்டுமே உள்ளன. வன விலங்குகளைப் பாதுகாப்பது நமதுகடமை. அதன் மூலம், சுற்றுப்புறச் சூழ்நிலையைக் காப்பாற்ற வேண்டும். பாம்புத்தோல், தந்தம் போன்ற பொருட்கள் கடத்தப்படுகின்றன. அவைகள் தடுக்கப்படவேண்டும். லாபநோக்குடன் சில இடங்களில் காடுகள் அழிக்கப்படுகின்றன. அவை தடுக்கப்பட்டாக வேண்டும்.

* தாலுக்கா அளவில் வனவிலங்குப் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கப்படும்.
* கடல் கன்னி என்று அழைக்கப்படும் 'கடல் பசு தேசியப் பூங்கா' அடுத்த ஆண்டிற்குள் அமைக்கப் படும்.

''வனவிலங்குகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை மக்கள் உணர, வன விலங்குகள்சரணாலயங்களைச் சுற்றியுள்ள இடங்களில் வனவிலங்குப் பாதுகாப்புச் சங்கங்களை அமைக்க வேண்டும்.''

விழாவில், ''வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்'' என்ற திரைப்படத்தை மேதகு ஆளுநர் வெளியிட்டார். மாணவ, மாணவிகளுக்கு இடையே நடைபெற்ற ஓவியப் போட்டியில் பரிசு பெற்றவர்கட்கு மேதகு ஆளுநர் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த புகைப் படம் மற்றும் ஓவியக் கண்காட்சியினை மேதகு ஆளுநர் திறந்து வைத்தார்.

விழாவில் வனம் மற்றும் மீன் துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு மு.அ.க.தய்யூப் இ.ஆ.ப. அவர்கள், உலக உயிரின நிதி நிறுவனத் தமிழ்நாட்டின் கிளைத் தலைவர் டாக்டர் நந்திதா சி.கிருஷ்ணா, சென்னை லயோலாக் கல்லூரிப் பூச்சியியல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் பேராசிரியர் திரு டி.என்.ஆனந்த கிருஷ்ணன் ஆகியோர் வன-உயிரினம் பற்றி உரையாற்றினார்கள்.

விழா இறுதியில் திருமதி சந்திரா தண்டாயுதபாணி நாட்டியக்கலாலய மாணவிகள் கலை நிகழ்ச்சி நடத்தினார்கள்.







# நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குப் புதிய கட்டடம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் வேலூரில் ரூ.32 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை 8.10.87 அன்று மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு வி.சுந்தரம் இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

தமிழக அரசு அரிசியைக் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்கிறது. 1 கிலோ அரிசி ரூ.1.75க்கு விற்பனை செய்கிறது. **இந்தியாவில் தமிழ்நாட்டைத்தவிர எந்த மாநிலமும் இந்த அளவுக்கு அரிசியை மலிவான விலையில் கொடுக்கவில்லை.**

அரிசியை வாங்கும் விலையை விடக் குறைவாக விநியோகம் செய்வதால் தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 100 கோடி இழப்புஏற்படுகிறது.ஏழைமக்கள் எந்தத் துன்பத்துக்கும் ஆளாகிவிடக்கூடாது என்று எண்ணியே அரசு அரிசி விலையைக் குறைத்துக் கொடுக்கிறது.

# முப்பெரும் விழா

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்கா அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சமுத்திரப்பட்டியில், 2.10.1987 அன்று காந்தியடிகள் பிறந்தநாள் விழா, காமராசர் பிறந்தநாள் விழா, இந்திரா நினைவு ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்பு வீடுகள் திறப்புவிழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.

குடியிருப்புகள் ரூ. 2 இலட்சத்து 4 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டவை.இந்த முப்பெரும் விழாவில் மாண்புமிகு மைய அரசின் உள்துறை இணை அமைச்சர் திரு ப.சிதம்பரம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் உள்ள குடியிருப்புகளில் சமையல் அறை, கழிப்பறை போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது சிறப்புடையது. இது மற்ற மாவட்டத்திற்கு **ஏன், தமிழ்நாட்டிற்கே முன்மாதிரியாக-வழிகாட்டியாக இருக்கிறது. இதைக் கட்டிக்கொடுத்த தமிழக அரசைப் பாராட்டுகிறேன்.**

"புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிப் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. இம்மாவட்டத்தில் வறட்சிப் பணிக்காக மைய மாநில அரசு சேர்ந்து ரூ.2 கோடியே 34 இலட்சத்து 76 ஆயிரத்தை ஒதுக்கி இருக்கிறது. இதுவரை ரூ.1 கோடியே 86 இலட்சத்து 29 ஆயிரம் செலவாகி இருக்கிறது. வறட்சியினால் வாடும் மக்களுக்கு கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்புத்தர வேண்டுமென்று இதுமாதிரியான திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம்.''

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்



# வறட்சி நிவாரணப் பணி

பருவ மழை தவறியதன் விளைவாக திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் பெரும்பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. அரசு நிதி உதவி கிடைக்கப் பெற்று தற்போது வறட்சி நிவாரணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அரசு ரூ.308.70 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

குடிநீர்த்திட்ட வேலைகளுக்கு ஏற்கெனவே 118 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது கூடுதலாக 101.50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 219.50 லட்சம ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடிநீர்த் திட்ட வேலைகளில் கிணறுகள் அமைப்பதற்காக 23.10 லட்சம் ரூபாயும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக 12.90 லட்சம் ரூபாயும், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்திட 6.50 லட்சம் ரூபாயும், உறைக் கிணறுகள் அமைத்தல், குடிநீர்த் திட்டங்களை மேமபாடு செய்தல் குடிநீர்த்திட்டங்களுக்கு தனி மின் இணைப்பு கொடுத்தல் ஆகிய பணிகளைச்செய்வதறகாக 9 லட்சம் ரூபாயும், 200 புதிய ஆழ்குழாய்க்கிணறுகள் அமைப்பதறகாக ரூ.50 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் கூடுதலாக 101.50 லட்ச ரூபாய் தற்போது ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று வறட்சி நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

வேலை வாய்ப்புத் திட்டங்களாகிய குளங்கள், ஊருணிகள் தூர் எடுத்தல், மண் வளப் பாதுகாப்பு வேலைகள், சமூக வனக் காடுகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஏற்கெனவே ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற தொகையாகிய ரூ.40.50 லட்சத்துடன் கூடுதலாக 48.70 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

1987-88ஆம்ஆண்டிற்குக்கிராம நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திற்காக 155 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டு, 59 லட்சம் ரூபாய் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டிற்கு 214 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு இம்மாவட்டத்திற்குக் கிடைக்கப்பெற்று இதுவரை 85 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1987-88ம் ஆண்டிற்கு இம் மாவட்டத்தில் களக்காடு, நாங்குனேரி, கோபாலசமுத்திரம், மேலச்செவல், இலஞ்சி, வாசுதேவநல்லூர், முக்கூடல் ஆகிய ஏழு பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.2 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மொத்தம் ரூ.14 லட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் தென்காசி, வள்ளியூர், நாங்குனேரி, ராதாபுரம், ஆலங்குளம், பாவூர் சத்திரம், மானூர், சங்கரன் கோவில், குருவகுளம், கடையம், களக்காடு, மூலக்கரைப்பட்டி மற்றும் சங்கனாபுரம் ஆகிய 13 கால்நடை மருந்தகங்கள் மூலமாக கால்நடைகளுக்கு வைக்கோல் விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வைக்கோல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் துறையினரால் அடையாளம் காட்டப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து அடையாள அட்டை பெற்றுள்ள விவசாயிகளுக்கு உணவுப் பங்கீட்டு அட்டை மூலம் 1 நாளைக்கு 1 மாட்டுக்கு 3 கிலோ என்ற கணக்கில் ஒரு வாரத்திற்குத் தேவையான வைக்கோல் விநியோகம் செய்யப்படுகிறது. இதுவரை 2,41,365 கி.கிராம் வைக்கோல் விற்பனை செய்யப்பட்டு இதன் மூலம் 2,111 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.200 மானியத்தில்உரங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மானியச் சலுகை நெல் மற்றும் சிறு தானியப் பயிர்களுக்குச் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இம் மாவட்டத்திற்கு ரூ.9 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.3,26,340 செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கைவினைஞர்களுக்கு ரூ.40 கோடியில் வங்கிகள் மூலமாகக் கடன் உதவி வழங்கிட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து இக்கடன் உதவிகளைப் பெறுவதற்குரிய கடன் மனுக்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மூலமாகப் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

# திருச்சி மாவட்டம்

# வறட்சி நிவாரணப் பணி

திருச்சி மாவட்டத்தில் தென் மேற்குப் பருவ மழையினால், அதாவது ஜூன் முதல் செப்டம்பர் முடிய சாதாரணமாகச் சராசரி மழையளவு 274 மி.மீ. ஆகும். ஆனால் பெய்த மழையளவு 212 மி.மீ. எனவே மழையளவில் குறைவு 62 மி.மீ. மட்டுமே ஆகும். சென்ற ஆண்டை விட மழையளவு குறைவாக இருப்பினும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பரவலாகப் பெய்துள்ள மழையினால் மாவட்டம் முழுவதும் விவசாயப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

வாழை சாகுபடியில் கூடுதலாக 750 எக்டேர் இம்மாதம் முடிவதற்குள் சாகுபடி செய்யப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஜனவரி '87 முதல் கூட்டுறவு மற்றும் நாட்டுடைமை வங்கிகள் மூலமாக ரூ.36 கோடி கடன் வசதி செய்யப்பட்டுள்ளது. (ஆண்டு குறியீடு ரூ.45 கோடி) இதனால் 87,757 விவசாயிகள் கடன் பெற்றுப் பயனடைகிறார்கள்.

இதில் நடப்பு விவசாயக் காலத்தில் (87 சூலை திங்கள் முதல் இன்றுவரை) முன்பணமாக ரூ.12 கோடி 33,347 விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக எந்த ஒரு பம்புசெட்டிற்கும் மின்இணைப்பு துண்டிக்கப்படவில்லை. மேலும் மின் பணம் பாக்கிக்காக 28.2.88 முடிய விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு எக்காரணத்தைக் கொண்டும் துண்டிக்கப்படாது.

334 வடிமுறை குழாய்களுக்கு மின் இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் முசிறி, லால்குடி மற்றும் உடையார்பாளையம் ஆகிய வட்டங்களில் வழங்க மின் துறை கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரண நடவடிக்கையாக இம்மாவட்டத்தில் ரூ.113 லட்சம் செலவில் 450 குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இன்று வரை ரூ.97 லட்சம் செலவில் 388 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவை 31.10.87க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

கிராமப்பஞ்சாயத்துக்களில் ரூ. 10 லட்சம் செலவில் 30 திறந்த வெளிக்கிணறுகள் அமைக்க அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிந்துள்ளன.

கிராமப் பஞ்சாயத்துக்களில் 801 கிணறுகளை ஆழப்படுத்த ரூ.26.5 லட்சம் அனுமதிக்கப்பட்டது. நகரப் பஞ்சாயத்துக்களில் 6 லட்சம் செலவில் 61 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு ரூ.27.5 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மணப்பாறை நகராட்சியில் இப்பணிக்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



லாரிகளின் மூலமாகக் குடிநீர் வினியோகிக்க கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ரூ.9 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்று வரை ரூ.15 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நகராட்சிப் பகுதிகளில் இப்பணிக்காக ரூ.3.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்றுவரை ரூ.4.5 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆழ்குழாய்க் கிணறுகள் பணிக்காக ரூ.1.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 85 பணிகள் கிராமப்புற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு யாவும் செலவிடப்பட்டது.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வேலையில்லாத விவசாயக் கூலிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏரிகளை ஆழப்படுத்தல் போன்ற 842 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. இதற்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட ரூ.30 இலட்சத்தை விட கூடுதலாக ரூ.1 லட்சம் செலவிடப்பட்டது. அண்மையில் நகரப் பஞ்சாயத்துக்களில் இப்பணிகளுக்காக ரூ.2 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏரிக்கரைகளைப் பலப்படுத்துவதற்காக ரூ. 13.5 லட்சம் பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்றுவரை ரூ.8.5 லட்சம் செலவில் 55 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 46 பணிகள் ரூ.5 லட்சம் செலவில் பொதுப்பணித்துறை மூலமாகச் செய்து முடிக்கப்படும்.

கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல் தடுப்பு அணைகள் போடுதல் போன்றபணிகளுக்காக ரூ.14 லட்சம் விவசாயப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று வரை ரூ.9 லட்சத்தில் 70பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 39 பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. இவை யாவும் 31.10.87க்குள் முடிக்கப்படும்.

திருச்சி மாவட்டத்திற்கு இதுவரை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக அரசு ரூ.2 கோடியே 40லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ.2 கோடியே 24 லட்சம் செலவில் இதுவரை பணிகள் நடைபெற்றுள்ளன.

குடிநீர்த் திட்டப்பணிகளுக்காக ரூ.18 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.175 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புப் பணிக்காக ரூ.59 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.49 லட்சம் செலவிடப்பட்டது.



# ரஷ்ய மண்ணில் தமிழகச் சிலம்ப ஆட்டம்

பண்டைய வீர விளையாட்டுகளில் சிலம்பு ஆட்டமும் ஒன்று. தமிழர்களின் இந்த வீர விளையாட்டு மேலை நாட்டினரையும் இன்று வெகுவாகக் கவர்ந்து வருகின்றது.

அண்மையில் ரஷ்யாவில் நடந்த இந்தியக் கலை விழாவில், இந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல்வேறு மாநிலங்களிலிருந்து கலைக்குழுவினர் அங்கே தத்தம் நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்கள். இதேபோல் தமிழ்நாட்டிலிருந்து 9 பேர் கொண்ட சிலம்பு விளையாட்டு வீரர் குழு ஒன்று ரஷ்யாவுக்குச் சென்றது.

ரஷ்யாவில், தாஷ்கெண்ட், பொகாரோ, சாமர்கண்ட் ஆகிய இடங்களில் மொத்தம் 13 முறை இந்தக் குழுவினர் வீர விளையாட்டுகளைச் செய்து காட்டினர்.

சிலம்ப ஆட்டம் மற்றும் சுருள் கத்தி வீச்சு, மான்கொம்புச் சண்டை, தீப்பந்தம் சுற்றுதல் ஆகியவையும் செய்து காட்டப்பட்டன. ஒரு வாரம் நடந்த இந்த நிகழ்ச்சிகள் ரஷ்ய மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றது. இந்தக் குழு 23.9.87அன்று சென்னை திரும்பியது. தமிழக விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித் துறை சார்பில இந்தக் குழுவினருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழகச் சிலம்பக் குழுவினருக்குத் தலைவராக, சேலம் மாவட்ட திருச்செங்கோடு அரசு உயர்நிலைப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் திரு அங்கப்பன் சென்று இருந்தார். குழுவின் மேலாளராகச் சென்னை ஒய்.எம்.சி.ஏ. கல்லூரிப் பேராசிரியர் திரு டேவிட் மானுவேல் சென்றிருந்தார். அவர் கூறியதாவது:

''தமிழக வீர விளையாட்டுகளை ரஷ்யர்கள் மிகவும் ரசித்துப் பார்த்தனர். பல இடங்களில் சிலம்புச் சண்டை பற்றி அவர்கள் ஆர்வத்துடன் விசாரித்தார்கள். சிலம்புக் குச்சிகள் பற்றியும், சிலம்புச் சண்டை முறை பற்றியும் ரஷ்ய இளைஞர்களுக்கு விளக்கிக்கூறினோம்.

''சிலம்பு விளையாட்டு தவிர எங்கள் குழுவினர் செய்து காட்டிய மான்கொம்புச் சண்டைக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

''இவையன்றி, தீப்பந்தம் சுற்றுதல், சுருள் கத்திச்சண்டை ஆகிய விளையாட்டுகளை இளைஞர்கள் பார்த்து ரசித்தனர்.

இந்தக் குழுவில் இடம்பெற்று இருந்த மல்லேசுவரி, பழனியம்மாள் ஆகிய மாணவிகள் செய்து காட்டிய மான்கொம்புச் சண்டை, சிலம்புச் சண்டை ஆகியவற்றை அங்குள்ளவர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.''

தமிழக விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித்துறை ஆணையர் திரு ஆர். நாகராஜன், இ.ஆ.ப. தமிழகச் சிலம்ப விளையாட்டுக் குழுவினரைப் பாராட்டினார்.

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




**லைப்பாய்**

**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM





# பைந்தமிழ் வளர்த்த பாவலருக்கு நினைவு மண்டபம்

''குன்றும் மலையும் குவிந்து நிற்கும்
மூன்று கடல்கள் முத்தமிடும்
தென்றல் இன்பம் என்றும் தரும்
நன்றே வாழும் குமரி நாடு''

என்று குமரி மண்ணின் பெருமையைக் கவிஞர்கள் கூறுகின்றனர். இயற்கை எழில் கொஞ்சும் இந்த மண்ணில் பிறந்தவர்தான் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள். ஒரே நேரத்தில் நூறு சிந்தனைகளை நினைவில் வைத்து அதற்கு நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்.

அவர்களின் அறிவுத் திறமையையும், தமிழ்ப்பற்றையும் உணர்த்துகின்ற வகையில் அன்னாருக்கு நினைவு மண்டபம் கட்ட 24.9.1984 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

கண்ணைக் கவருகின்ற வகையிலே கலைக்கூடமாக ரூ.4 லட்சத்து 51 ஆயிரம் செலவில் இடலாக்குடியில் கட்டப்பட்ட நினைவுக் கட்டடத்தின் திறப்பு விழா 26.9.87 அன்று சிறப்புற நடைபெற்றது.

இனிய இந்த விழா நிகழ்ச்சிக்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையேற்று உரை நிகழ்த்தினார். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ். முனீர்ஹோதா, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நினைவு மண்டபம் பற்றிய விளக்கவுரையை, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் ஆற்றுகையில்,

''கீழ்த்தளம் மற்றும் மேல்மாடியுடன் கூடிய வகையில் இம்மண்டபம் கட்டப்பட்டுள்ளது. கீழ்த் தளத்தில் அன்னாரின் சமாதிக்கு அருகில் அமைந்துள்ள கண்காட்சிக் கூடத்தில் அவருடைய வாழ்க்கையில் நடந்த முக்கிய சம்பவங்கள் மற்றும் தமிழ்மொழியை வளர்த்த இடங்கள் போன்றவை வண்ணச் சித்திரங்களின் வாயிலாக மக்களுக்கு எடுத்துக்காட்டப்படவுள்ளன. மேல்தளத்தில் கருத்தரங்கு மண்டபமும் நூலகமும் அமைக்கப்படவுள்ளன'' என்றார்.

காண்போர் விழிகளைக் கவரும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த எழில் மண்டபத்தை மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் திறந்து வைத்து பாவலர் பற்றிய நூல் ஒன்றையும் வெளியிட்டார். நலிந்த பிரிவினருக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், பாவலர் பற்றி நடத்தப்பட்ட நாவன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவுப்பரிசுகளையும் வழங்கி அமைச்சர் அவர்கள் பேருரை ஆற்றினார்.

''இந்த மண்டபம் வெறும் கண்காட்சிக் கூடமாக இல்லாமல் இலக்கிய விவாதம் நடைபெறும் கூடமாகவும், ஆராய்ச்சி மையமாகவும், மாண்புமிகு முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் அமெரிக்காவில் இருந்து வந்த பிறகு ஆக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். சீறாப்புராணம் எழுதிய உமறுப்புலவருக்கு மணி மண்டபம் எழுப்ப வேண்டும் என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். செய்குத்தம்பிப் பாவலர் எழுதிய சுவடிகளைப் புத்தக வடிவில் கொண்டுவர அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்'' என்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், செய்குத்தம்பிப் பாவலர் சதாவதானம் செய்தது சென்னையில் உள்ள விக்டோரியா மண்டபத்தில் என்றும், எனவே அந்த மண்டபத்துக்குச் செய்குத்தம்பிப்பாவலர் பெயரைச் சூட்ட வேண்டும் என்றும் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அமெரிக்காவில் இருந்து வந்த பின்னர் விக்டோரியா மண்டபத்துக்குப் பாவலர் பெயர் வைப்பது சம்பந்தமாக அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

# திருச்செந்தூர் திருக்கோயில்



நீண்டமிழ்க் கடவுள் செந் தமிழ்முருகன் கோயில் கொண்டுள்ள படைவீடுகளில்இரண்டாவதாக விளங்குவது ‘துருச்சீரலைவாய்’ எனும் திருச்செந்தூராகும். இவ்வூரின தொன்மை பற்றியும் செந்தூர் சேந்தலின் தொல்லுலக திருவருட் சிறப்புப் பற்றியும் ஞானிகளும் புலவர்களும் பல படப் புகழ்ந்துள்ளார்கள்.

‘வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில் ‘எனப் புறநானூறும் ‘திருமணி விளக்கின் அலைவாய்’ என அகநானூறும் ‘சீர்கெழு செந்தில்’ எனச சிலப்பதிகாரமும் ‘உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீரலைவாய்’என நக்கீரரும் ‘பவளத்துங்கபுரிசைச் செந்தில்’ எனத்திருப்புகழும் நந்தூர் அலைவாய் செந்தூர்ருக்குப் புகழாரம் சூட்டியுள்ளனர்.

அகஸ்தியர், அப்பர், அருணகிரிநாதர், ஆதிசங்கரர், பகழிக் கூத்தர், குமரகுருபரர் ஆகியோர் அருள்பெற்ற தொன்மையான தலம் இது.

மூலவருக்கு கேரள தந்திர முறையில் போத்திகளாலும், ஆறுமுகப் பெருமானுக்கு ஆதி சைவர்களாலும் பூசை செய்யப் படுகிறது.

வைகாசி விசாகம், ஆவணி, கந்தசஷ்டி மாசி ஆகிய திருவிழாக்கள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. ஆவணி மற்றும் மாசித் திருவிழாவில் 7 மற்றும் 8-ம் நாட்களில் சண்முகப் பெருமான் சிவப்பு, வெள்ளை மற்றும்பச்சைசாற்றுதல் செய்யப் படுவது முக்கிய நாட்களாகும்.

இத்திருக்கோயிலில் சிறப்பு அமசமாக விளங்கும் பன்னீர் இலை விபூதியும், நற்சந்தனமும் பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக வழங்கப்பட்டு வருகின்றன. தீராத நோயினால் அவதிப்பட்டுக கொண்டிருந்த ‘ஆதிசங்கரர்’ இத்திருத்தலத்தில் வந்து இங்கு வழங்கப்படும் இலை விபூதியை உட்கொண்டு நோய் நீங்கப் பெற்றார். இந்த விவரத்தை அவர் இத்திருத்தலத்தில் பாடி

**எஸ்.கனகய்யா**



அருளிய 'ஸ்ரீ சுப்பிரமணிய புஜங் கம்' என்னும் அருட்பாமாலை யில் கூறியுள்ளார்.

1983 ஆகஸ்டு மாதம் முதல் தற்போது திருச்செந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பின ராக இருக்கும் திரு எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்அவர்கள் அரசினரால் தக்காராக நிய மிக்கப்பட்டுப் பணியாற்றி வரு கிறார். 1-1-85 முதல் இத் திருக்கோயில் நிர்வாக அதிகாரி பதவி துணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டு நிர் வாகம் நடைபெற்று வருகிறது.

இத்திருக்கோயில் பணியா ளர்கள் 353 பேர்கள் உள்ளனர். அர்ச்சனை முதலான சீட்டுகள் விற்பனை, பன்னீர் விற்பனை, விடுதிகள் அறைகள் வாடகைக்கு விடுதல் ஆகிய பல வருவாய் உள்ள பணிகளிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கீழ்க்கண்ட திருக்கோயில்கள் இத்திருக்கோயிலின் உபகோயில் களாக இயங்கி வருகின்றன. அவையாவன. 1. அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர் கோயில், திருச்செந்தூர் (2) அருள்மிகு வெயிலுகநதம்மன் கோயில், (3) அருள்மிகு காஞ்சி விஜய கச்சி கொண்ட பாண்டீஸ்வரர் கோயில், குலசேகரன் பட்டினம், (4) அருள்மிகு சக்தி விநாயகர் கோயில், நாசரேத் (5) அருள்மிகு சித்தி விநாயகர் கோயில், இடிந்த கரை (6) பிராண வேஸவரர் கோயில், ஓமநல்லூர் (7) அருள் மிகு பிரசன்ன சக்தி விநாயகர் கோயில், சுப்பிரமணியபுரம் எஸ்டேட், (8) அருள்மிகு ஐக்கிய விநாயகர் கோயில், காயாமொழி (9) அருள்மிகு குன்றுமேலய்யன் சாஸ்தா கோயில், நாலுமூலைக் கிணறு (10) அருள்மிகு மாரியம் மன் திருக்கோயில், தெற்கு நல்லூர் (ஆதிதிராவிடர் வழி பாடடுக் கோயில்) (11) அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், மேற்கண்ட திருக்கோயில்கள் தமிழக அற நிலையத்துறையின் ஆளுகைக்கு உட்பட்டதாகும்.

இக்கோயில் சார்பாக தங்கும் விடுதிகள் பராமரிக்கப்பட்டு வரு கின்றன. அவையாவன: செந்திலாண்டவன் விடுதி, வேலவன் விடுதி, ஜெயந்தி நாதர் விடுதி, ஆறுமுகவிலாஸ் விடுதி, சண்முகவிலாசம் விடுதி, சிறுகுடில்கள், தேவர் குடில்கள்.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து அன்பு இல்லம், சிறுவர் இல்லம், முதியோர் இல்லம். சித்த வைத்தியசாலை, நூல் நிலையம் முதலிய சமய நிறுவ னங்கள் நடத்தப்பட்டு வருகின் றன.

பக்தர்கள் விரும்பும் வகையில் இத்திருக்கோயில் மூலம் உதய மார்த்தாண்டக் கட்டளை, நித்தியபடி கட்டளை, ஜெயந்தி நாதர் கிருத்திகை அபிஷேகக் கட்டளை, தங்கரதப் புறப்பாடு கட்டளை, சண்முகார்ச்சனை கட்டளை முதலிய சிறப்புக் கட் டளைகள், நல்லமுறையில் செய் யப்பட்டு வருகின்றன.

இத்திருக்கோயிலில் கடந்த மூன்றாண்டுகளில் சுமார் ரூபாய் 44.65 இலட்சம் செலவில் கட்டு மானப்பணிகள் நடந்து முடிந் துள்ளன. தற்போது நடந்து வரும் மற்றும் உத்தேசிக்கப்பட் டுள்ள கட்டுமானப் பணிகளின் மதிப்பு சுமார் ரூபாய் 1.62 இலட்சம்.

தற்போது திருக்கோயில் வளாகத்திலுள்ள எல்லா விடுதி களுக்கும் திருக்கோயிலுக்கும் தண்ணீர்தேவைக்குதிருக்கோயிலி லிருந்து சுமார் 2 கி.மீ. தொலை வில் உள்ள தெப்பக்குளம் அருகில் உள்ள இரு கிணறுகளிலிருந்து குழாய்கள் வாயிலாக தண்ணீர் கொண்டு வரப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தவிர எப்போதும் கோடைக் காலங்களிலும் ஒரே சீரான முறையில் தண்ணீர் கிடைக்க, வேலவன், செந்தி லாண்டவன், ஜெயந்திநாதர் விடுதிகளிலும் ஆழ்குழாய்க் கிணறு (போர் வெல்) அமைக்கப் பட்டு வருகின்றது.

வரும் பக்தர்களின் நலன் கருதி நவீன முறையிலான கழிப் பிடங்களும், குளியலறைகளும் நுழைவு வாயில் அருகே ஒன்றும் ஜெயந்திநாதர் விடுதி அருகே ஒன்றும், புதிய பேருந்து நிலை யத்தின் அருகே ஒன்றும் ஆகிய மூன்று கட்டணக் கழிப்பறை களின் கட்டுமானப்பணி முடியும் தருவாயில் உள்ளது.

இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருதி சுகாதாரமான முறையில், குறைந்த விலையில் திருக்கோயில் மூலம் 17-8-87 முதல் புளியோ தரை மற்றும் சர்க்கரைப்பொங் கல் தயார் செய்யப்பட்டு, திருக்கோயில் பிரசாதமாக வழங் கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயில் மூலம் ஆதி திராவிடர்கள் மற்றும் பிற்பட்ட



வகுப்பைச் சார்ந்தவர்களுக்குத் திருமணம் செய்து கொள்ள, திருமாங்கல்யம், துணிமணி, பாத்திர பண்டங்களுக்காகத் திருமணம் ஒன்றுக்கு ரூ. 1000 வரை உதவித்தொகை வழங்கப் பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலுக்கான சாகுபடி நிலங்கள் பெரிதும் உள்ள கோபால சமுத்திரம், சேரன்மகாதேவி ஆகிய இரு ஊர்களில் இந்து மத சமுதாயத் தினர் எளிய முறையில் திரு மணங்கள் இதர மங்களகரமான சடங்குகளை நடத்திடும் வகை யில் குறைந்த வாடகையில் நிறைந்த வசதியுடன் இரு திருமணக்கூடங்கள் கட்டுவதற் கான திட்டங்கள் செயல்படுத்தப் பட உள்ளன. திருச்செந்தூர் மேலக்கோயிலிலும் ஒரு திருமண மண்டபம் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

தற்போது இத்திருக்கோயிலில், விசேட நாட்களில் மட்டும்தான் வரும் பக்தர்கள் வரிசையாகச் சென்றிட்டு ஆண்டவனைத் தரி சிக்கும் வாயிலாகத் தற்காலிக முறையில் 'வரிசைமுறை' க்யூ ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தவிர்த்து எல்லா நாட் களிலும் அமைதியான முறையில் இடிபாடுகளின்றி வரிசையாகச் சென்று ஆண்டவனைத்தரிசிக்கும் வகையில் பக்தர்களின் நலனை முன்னிட்டும் மகளிர்களின் பாது காப்பினைக் கருதியும் நிரந்தர மான 'வரிசைமுறை' அமைப்பு ஏற்படுத்தப்பட்டு நல்லமுறை யில் செயல்பட்டு வருகிறது.

திருச்செந்தூர் கன்னியாகுமரி செல்லும் பாதையில் சுமார் 14 கி.மீ. தூரத்தில் இத்திருக்கோயி லின் உபகோயிலான அருள்மிகு காஞ்சி விஜய கச்சிகொண்ட பாண்டீஸ்வரர் திருக்கோயில், குலசேகரன்பட்டினம் உள்ளது. இக்கோயில் கி.பி. 14-ம் நூற் றாண்டில் பாண்டியமன்னர் களால் கட்டப்பட்ட மிகவும் சக்தி வாய்ந்த சிவாலயம். இத்திருக் கோயிலில் அமைந்துள்ள முக்கிய அம்சங்களில் நவக்கிரகங்கள் பதி னொன்று, அதில் சூரிய பகவான், சூரிய சம்யா அரசாட்சியாக நடத்தும் காட்சியாக உள்ளது. திருக்கோயிலில் அமைந்துள்ள மாமரம் வருஷம் முழுவதும் பூத்துக் காய்த்துக்கொண்டும், அதனடியில் அம்பாள் தவ மிருக்கும் காட்சியும் சிறப்பாக உள்ளது. இத்திருக்கோயி லில் ரூ. 5 இலட்சம மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் நடை பெற்றுவருகின்றன. திருப்பணி வேலைகள் முடிந்தவுடன் கும்பா பிஷேகம் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

திருநெல்வேலி திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் 10-வது கிலோ மீட்டர் தொலைவில் சாலை ஓரத்தில் அருள்மிகு வெங்கடா சலபதி திருக்கோயில், கிருஷ்ணா புரம் அமைந்துள்ளது. இக்கோயில் பதினாறாம் நூற்றாண்டில் மதுரையில் அரசு செலுத்தி வந்த குமார வீரப்பநாயக்கர் என்ற மன்னரால் கட்டப்பட்டது. கோயிலில் உள்ள சிலைகள் உயி ரோவியங்களாகக் காட்சி அளிக் கின்றன. மிகவும் நுணுக்கமான வேலைப்பாட்டுடன்கூடிய பேசும் சிலைகள் ஆடை, அணிகலன்கள், முடி அலங்காரம் ஆகியவை மிகவும் கூர்மையாக வடிக்கப்பட் டுள்ளன. ஒரே தூணில் பல்வேறு சிலைகள் வடிவமைக்கப்பட்டுள் ளன. மற்றும் இத்திருக்கோயில் திருப்பணி வேலைகள் நடை பெற்று வருகின்றன. திருப்பணி வேலைகள் முடிந்தவுடன் கும்பாபிஷேகம் நடத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சீரிய கொள்கையின்படி சமுதாயத்தில் பின் தங்கியிருக்கும் ஆதிதிராவிட மக்கள் நிறைந்த நல்லூர் கிரா மத்தில் அவர்கள் வழிபடும் ஆலய மான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இத்திருக்கோயி லுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வரு கின்றன.

இத்திருக்கோயிலுக்கு வடக் கில், தேவர் குடிலை ஒட்டி கடற்கரை ஓரத்தில் வள்ளிகுகை ஒன்று உள்ளது. முருகக் கட வுளின் வேண்டுகோளின்படி விநாயகப் பெருமான் யானை வடிவு கொண்டு வள்ளியம் மையைத்துரத்தி வருகையில், இந்தக் குகையில்தான் வள்ளி யம்மை ஒளிந்து கொண்டதாக இப்பகுதியில் ஓர் புராணக்கதை வழங்கி வருகிறது. இரவு பகல் எந்த நேரத்தில் சேவார்த்திகள் இந்தக்குகைக்குச் சென்று வழி பட்டு வர ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

இத்திருக்கோயில் எல்லையில் உள்ள தோரண வாயிலுக்குச்சமீ பத்தில் உள்ள சரவணப்பொய்கை சுற்றுப்புரம் சுத்தப்படுத்தப்பட்டு தோட்டம் அமைத்து சோடியம் வேப்பர் விளக்குகள் பொறுத் தியும் பொய்கையிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் எடுத்து பக்தர்கள் தீர்த்தத்தில் நீராட வகை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தமிழகச் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி



தமிழகத்தில் வறட்சியால்
பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு
விவசாயிகளுக்கு உதவும் வகை
யில் வறட்சி நிவாரணத்திற்காக
ரூபாய் 420 இலட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது. இந்த உதவி விவ
சாய இடு பொருள்களாக வழங்
கப்படும். பாதிக்கப்பட்ட விவ
சாயிகளுக்கு எக்டேருக்கு ரூபாய்
200 வீதம் மானியமாக உரங்கள்
பூச்சி கொல்லி மருந்துகள்,
விதைகள், மற்றும் தென்னங்
கன்றுகள் வழங்கப்படும். இந்த
இடு பொருட்கள் வேளாண்மைத்
துறை, எண்ணெய் வித்துத் துறை
கள் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்
களின் வாயிலாக இடு பொருட்
களாக வழங்கப்படும். இந்த
வசதியைச் சிறு-குறு விவசாயிகள்
பயன்படுத்திக் கொள்ளுமாறு
கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# அண்ணா மாவட்டம்



## வறட்சி நிவாரணப் பணி

**மிருத்யுஞ்சய் சாரங்கி, இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**அண்ணா மாவட்டம்.**

அண்ணா மாவட்டத்தில், கடந்தமூன்றாண்டுக் காலமாகவே சராசரி மழையினைவிட குறைவாகவே மழை பெய்ததால் வறட்சி நிலைமை மிகவும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வறட்சியின் பிடியில் சிக்கிப் போன வேலையற்ற தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கும் வகையில் பலவித வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

அண்ணா மாவட்டத்தில் உள்ள 2,612 விவசாயக் குளங்கள் முற்றிலுமாக வறண்டு போய்விட்டிருக்கின்றன. 75,690 விவசாயக் கிணறுகளில் 50 சதவீதம் முற்றிலும் வறண்டு போனதால் மூவாயிரம் எக்டேர் நிலத்தில் பயிரிடப்பட வேண்டிய நெல் 834 எக்டேரில் மட்டுமே பயிரிடப்பட்டதால் 14,390 மெட்ரிக் டன் உற்பத்தி குறைந்துள்ளது. இம்மாவட்டத்தில் குளங்கள் மராமத்துச் செய்ய ரூ. 45 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு 562 ஏரி மற்றும் ஊரணிகளில் 362 முடிக்கப்பட்டு ரூ. 30 இலட்சம் செலவழிக்கப்பட்டு உள்ளது. மிகுதி வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தலுக்காக ரூ. 19.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 389 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தும் வேலை மேற்கொள்ளப்பட்டதில் 359 குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு ரூ. 15.97 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மற்ற கிணறுகளில் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

புதிய கிணறு வெட்டுவதற்கு ரூ.14.25 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டதில் 31 கிணறுகள் வேலை மேற்கொள்ளப்பட்டு 19 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டு ரூ. 9.25 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மற்ற 12 கிணறுகள் வெட்டும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது.

அடிப்படைத் தேவையான குடிநீர்த்தேவையைச் சமாளிக்க போர்க் கால அடிப்படையில் நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. லாரி மூலம் குடிநீர் வழங்க ரூ. 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துக்கள் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதில் ரூ. 2.62 லட்சம் செலவழிக்கப்பட்டு உள்ளது. மற்றும் குடிநீர் கிடைக்காத இடங்களுக்கு அலுவலர்கள் விரைந்து சென்று அப்பகுதிகளில் குடிநீர் கிடைக்காத நிலை ஏற்படும் பொழுது லாரி மூலம் குடிநீர் கிடைக்க உரிய ஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மக்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைக்குப் பெரிதும் நம்பியிருக்கும் கைப் பம்புகள் ரூ.1.75 லட்சம் செலவில் உடனடியாகப் பழுது பார்க்கப்பட்டு பயன் படுத்திக் கொள்கிற நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் 210 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 145 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் முடுக்கிவிடப்பட்டு முழு அளவில் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் ஒன்பது இலட்சம் செலவில் 39 குளங்கள் பொதுப் பணித்துறையினரால் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

பழனி சிறந்த யாத்திரைத் தலம், பழனி தாலுகாவில் ஜனத் தொகை 3லட்சத்து 75 ஆயிரத்து 923 ஆகும். இதில் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மட்டும் 77,167 ஆகும். இக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் எண்ணிக்கை தினமும் 25 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் வரை ஆகும்.

பழனி தாலுகாவில், பழனி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி என்ற மூன்று ஊராட்சி ஒன்றியங்களும், பழனி நகராட்சியும் உள்ளன. 857 குக்கிராமங்களைக் கொண்ட பழனி தாலுகாவில் எந்த ஆண்டும் இல்லாத வறட்சி ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஏற்பட்ட வறட்சியின் வேகத்தைத் தணிக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. ஒன்றியங்களில் உள்ள 88 குளங்கள் மற்றும் ஊரணிகளை மராமத்துச் செய்யும் பணி ரூ.7.25 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசு இதற்காக அனுமதித்துள்ள ரூ. 4.10 இலட்சம் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முழு வேகத்தோடு நடைபெற்று வருகின்றன.

ரூ. 3.45இலட்சம் செலவில் 52 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் மூன்று புதிய கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 1.20 இலட்சம் செலவிடப்பட்டுப் பணிகள் முற்றுப் பெற்றுள்ளன.

1986-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களில் 56



புதிய ஆழ்குழாய்க் கிணறுகளும் 1987ஆம் ஆண்டில் 25 புதிய ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டு உள்ளன.

தற்போது 17 ஆழ்குழாய்கள் புதியதாக அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பழனி நகராட்சிப் பகுதிகளுக்கு மட்டும் 34 ஆழ்குழாய்க் கிணறுகளும், 1987 ஆம் ஆண்டிற்கு இதுவரை 26 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. 10 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பழனி நகராட்சியைப் பொறுத்தவரை 1932ல் ஏற்படுத்தப்பட்ட பழனி குடிநீர்த் திட்டம் ஒன்றும், 1968-ல் ஏற்படுத்தப்பட்ட பழனி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மூலம் நகருக்குக் குடிநீர் அளித்து வருகிறது.

தற்போது நீர்ப் பிடிப்புப் பகுதியான கொடைக்கானலில் மழையின்மையால் ஏற்பட்ட நிலை காரணமாகக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதில் புதிய ஆழ்குழாய் அமைத்தல், குடிநீர்க் கிணறு அமைத்தல், குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்துதல் மற்றும் லாரி மூலம் தண்ணீர் வழங்குதல் ஆகிய பணிகள் நடைபெற்று வறட்சி நிலைமையைச் சமாளிக்க அனைத்து நடவடிக்கைகள் துரித கதியில் எடுக்கப்பட்டுள்ளன.

இயற்கை ஏற்படுத்திய வறட்சி வடுக்களைப் போக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் உடனுக்குடன் எடுத்து வருவதால் வறட்சியின் வேகம் இம்மாவட்டத்தில் தணிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதியாக சொல்லலாம்.

# 'சிறுமலை' சுற்றுலாத் தலமாகிறது!

"அண்ணா மாவட்டம் திண்டுக்கல் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சிறுமலைப் புதூரில் ரூபாய் 1.86 லட்சம் மதிப்புள்ள சமுதாயக் கூடங்கள் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் 27 நபர்களுக்கு ரூ.73 ஆயிரம் கடன் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

''ஆறாயிரம் மக்கள் தொகை கொண்ட இச்சிறுமலைப் பஞ்சாயத்தில் ஆண்டுக்கு ரூ.3.5 லட்சம் வருமானம் உள்ளது. வைப்பு நிதியாக மட்டும் ரூ. 12 லட்சத்தை வைத்துள்ளது. தமிழகத்தில் எந்த ஒரு பஞ்சாயத்திலும் இல்லாத அளவுக்கு வைப்பு நிதி வைத்துள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்.

''பஞ்சாயத்துத் தேர்தலுக்குப் பின்னர் இப்பகுதியில் சுமார் ரூ.8 லட்சம் மதிப்பில் பள்ளிக் கட்டடம், மயான வசதி, சாலைகள், மருந்தகம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வளம் மிகுந்த இச்சிறுமலைப் பகுதியில் பெயர் பெற்ற சிறுமலை வாழைகள் நோயால் தாக்கப்பட்டு அழிந்து போவதாக அறிகிறேன். அழிந்து போன சிறுமலை வாழையை வேளாண்மைத் துறையினர் தனிக் கவனத்துடன் விஞ்ஞானத் தொழில்நுட்ப உதவியுடன் வனவளத்தைப் பாதுகாக்கும் வகையில் மீண்டும் இப்பகுதியில் கொண்டுவர முனைப்புடன் செயலாற்றுவார்கள்.

''சிறுமலையைச் சுற்றுலா மையம் ஆக்குவதன் மூலம் சிறு-மலை அழியும். ஏனெனில் 40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஊட்டியின் இயற்கை அழகு இப்போது இல்லை. சுற்றுலா மையங்கள் பல வகையில் உள்ளன. உலகத்தாரனைவரும்பார்ப்பதுஇந்தியர் அனைவரும் பார்ப்பது, மாநிலத்தவர் மட்டும் பார்ப்பது, பகுதி மக்கள் மட்டும் பார்ப்பது எனப் பல்வேறு பகுதிகளாகச் சுற்றுலா மையங்கள் உள்ளன. எனவே சிறுமலை மாவட்ட அளவிலான சுற்றுலா மையமாக்கத் திட்டம் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.''

விழாவிற்கு அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மிருத்யுஞ்சய் சாரங்கி, தலைமை வகித்துப் பேசுகையில்,

''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் வறட்சியைத் தவிர்க்க குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் பல அமைத்து குடிநீர்த் தட்டுப்பாட்டை ஓரளவு தவிர்த்துள்ளோம்'' எனக் கூறினார்.

# அண்ணா மாவட்டத்தில் புதிய மாணவரில்லங்கள்



அண்ணா மாவட்டத்தில், திண்டுக்கல் தாலுகாவில், கம்பிளியாம்பட்டி, கன்னிவாடி, வேடசந்தூர் தாலுகா, காசிபாளையம் குஜிலியம்பாறை மற்றும் நத்தம் ஆகிய ஆறு இடங்களில் புதிய அரசு மாணவர் இல்லங்கள் திறப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்கண்ட ஆறு இடங்களிலும் உடனடியாக மாணவர் இல்லங்கள் திறப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இல்லத்திலும் 50 மாணவர் வீதம், பிற்பட்டோருக்கு 60 சதவீதம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதி வகுப்பினருக்கு 25 சதவீதம், சீர்மரபினர் 10 சதவீதம், முற்பட்ட வகுப்பினர் 5 சதவீதம் என்ற விகிதாச்சாரப்படிச் சேர்க்கப்படுவார்கள்.

தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு இலவச உணவும், தங்குமிடம், படிப்பில் பயிற்சியும் அளிப்பதோடு, ஆண்டிற்கு இரு முறை இலவச சீருடையும் வழங்கப்படும்.



# சோத்துப்பாறை அணை

"சூழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை.'' இது வள்ளுவர் வாக்கு. எத்தொழிலினும் சிறந்தது ஏர்த்தொழில் என்பதற்குக் காரணம், உழவுத்தொழில் மூலமே உலகத்து மக்கள் அனைவருக்கும் உணவு வழங்கப்படுகிறது. உழவுத்தொழில் ஓங்க நீர்வளம் வேண்டும். மழைக் காலங்களில் வீணாகின்ற நீரைத் தேக்க அணைக்கட்டுகள் பலவற்றைத் தமிழ்நாடு அரசு கட்டி வருகிறது. இதன் அடிப்படையில் மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் தென்கரை கிராமத்தில் சோத்துப்பாறை அருகில் வராக நதியின் குறுக்கே 100 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் 1,725 ஏக்கர் நிலம் ஆயக்கட்டுப் பாசனம் உறுதி செய்யப்படுகிறது. 67 ஏக்கர் நிலம் ஆயக்கட்டுகள் இணைக்கப்படுகிறது. 1,000 ஏக்கா நிலம் புதிதாகப் பாசனம் பெறும். மொத்தம் 2,792 ஏக்கர் நிலம் இந்தப் புதிய அணைக்கட்டினால் பயன் பெறவுள்ளது.

**ரூபாய் 16 கோடி செலவில் சோத்துப்பாறை நீர்த்தேக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன.** இந்த அணையின் உயரம் 193 அடி உயரத்தில் அமையும். பெரியகுளத்திலிருந்து 12 கி.மீ. தூரத்தில் சோத்துப் பாறை என்ற இடத்தில் இந்த அணை



உருவாக்கப்பட்டு வருகிறது. ரூ. 870.10 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அணைக்குத் தற்போது ரூபாய் 16 கோடி மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது வரை அணைப்பணிகளுக்காக ரூபாய் 2 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் அணைக்கட்டு வேலைகள் முடிவுற்றுப் பாசனத்திற்குப் பயன்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. இப்பாசனத் திட்டத்தின் மூலம் 2,196 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. அணையிலிருந்து பெரியகுளம் பகுதிக்கு குடிநீர் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கால்வாய்ப் பணிகளின்கீழ் ஒரு கால்வாய் 7.020 கி.மீ. நீளத்தில் வலது புறத்தில் ஆற்று மதகிலிருந்து கட்டப்பட உள்ளது. இக்கால்வாய் மூலம் 1,000 ஏக்கர் நிலங்களுக்குப்பாசனவசதி கிடைக்கும். 1985-ஆம் ஆண்டு அணை வேலைகள் தொடங்கப் பட்டன. பெரியகுளத்திலிருந்து சோத்துப்பாறை வரை அணுகு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சோத்துப்பாறை வேலைகள் மொத்தம் 12 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 10 பிரிவுகளுக்கு வானம் தோண்டும் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. கான்கிரீட்டு இடும் பணி நடைபெற்று வருகிறது. எஞ்சிய இரண்டு பகுதிகளிலும் ஆற்றின் போக்கை மாற்றியமைத்துப் பணிகள் தொடங்கப்படும்.

திட்டச் செயற்பொறியாளர் திரு சங்கரன் மேற்பார்வையில் அணை வேலைகள் நடைபெற்று வருகின்றன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இத்திட்டப்பணிகள் மூலம் தற்பொழுது வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். சோத்துப்பாறை அணை பாசனத்திற்குப் பயன்படுகின்ற நேரத்தில், ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் சிறந்த பயனளிக்கும்.

# தஞ்சை செஞ்சிலுவைச் சங்கம்



மேற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1988ஆம் ஆண்டில் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ரூ 5 இலட்சம் காப்புத் தொகையாக வங்கிகளில் செலுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையில் ஒரு ஆரம்ப நிதியாக ஏற்படுத்தி செஞ்சிலுவைச் சங்க வளாகமாகத் தொடங்கப்படும் என்று 10.10.87 அன்று தஞ்சாவூர் பொன் நகரில் செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் குழந்தைகள் நலக் காப்பகத்தையும் பெண்களுக்கான தையலகத்தையும் தொடங்கி வைத்து, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமு, இ.ஆ.ப. அவர்கள் கூறினார். 60 குழந்தைகளுக்குச் சீருடையும் இலவச ரிக்ஷாக்களும் விழாவில் வழங்கப்பட்டன.

மாவட்ட அளவிற்கான செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஒரு பரிசும் செயலருக்கு ஒரு பரிசுமாக இரண்டு பரிசுகளை 14.10.87 அன்று மேதகு ஆளுநர் திரு.எஸ்.எல் குரானா அவர்கள் வழங்கினார்.



# பெருமைமிக்க பெருந்தலைவர்

ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை ஜாதியில் இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே" என்றார் மகாகவி பாரதியார்.

பாரதியாரின் கூற்றின்படி ஜாதி வேறுபாடின்றி உழைப்பால் உயர்ந்து, மக்கள் மனத்தில் நீங்காத இடத்தைப் பெற்றவரும், எளிய நிலையில் வாழ்ந்தும் தலைவனுக்குத் தொண்டராகவும், தொண்டருக்கு தலைவராகவும் குமரி மாவட்ட மக்கள் செல்லமாகஅழைக்கும் 'அப்பச்சி' என்ற பெயருக்குச்சொந்தக்காரருமான பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 85 வது பிறந்த நாள் விழா தமிழ்நாடு அரசின் சார்பாக மாநில அளவில் நாகர் கோவில் நகரில் அமைந்துள்ள கலைவாணர் கலையரங்கத்தில் 26.9.87 அன்று சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். இந்த விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.கே.கே. எஸ், எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தலைமை உரையாற்றினார்.

அரசு செயற்படுத்தி வருகின்ற நலத்திட்டங்கள் பற்றி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.முனீர் ஹோதா இ.ஆ.ப., விளக்க உரையாற்றினார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தும், நலிந்த பிரிவினருக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு டி. கே. டி. துரைராசன் நன்றி கூறினார்.

# வறட்சிப் பகுதிகளில் அதிக உணவு தானியம் வழங்கப்படும்

வறட்சிப் பகுதிகளில் கிராம மக்களுக்கு அதிகமான அளவில் வேலை வாய்ப்புகளை அளிக்கும் பணிகளை ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உணவுத் தானியங்கள் அதிகமாகக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு தொழிலாளருக்கு அளிக்கப்படும் தினக்கூலி ரூ.10ல், 3 கிலோ அரிசி, அல்லது 3 கிலோ கோதுமையுடன் எஞ்சிய தொகையை ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் தொழிலாளர்கள் அதிக விலைக்கு உணவுத் தானியங்களை வெளிச் சந்தையில் வாங்க வேண்டிய சூழ்நிலை தவிர்க்கப்படுகிறது. வறட்சிப் பகுதிகளில் உணவுத் தானியங்களின் விலைவாசி ஏற்றமும் கட்டுப்படுத்தப்படுகிறது.

உணவுத் தானியங்கள் அதிகமாக வழங்கப்படுவதால் உபரியாகக் கிடைக்கும் தொகையைக் கொண்டு, மேலும் புதிய வேலை வாய்ப்புத் தரும் வேலைகளை வறட்சிப் பகுதிகளில் நிறைவேற்ற உதவியாக இருக்கிறது.

வறட்சிப் பகுதிகளுக்கென்று 13,554 மெட்ரிக் டன் அரிசியும், 13,554 மெட்ரிக் டன் கோதுமையும் இவ்விரு கிராமப்புற வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/என்ஏஎஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

## சிதம்பரனார் மாவட்டத்தில்

# மீன் வளக் கல்லூரி

சங்கு கொழிக்கும் சிதம்பரனார் மாவட்டத்தின் தலைமையிடமாகிய முத்து மாநகரில் 1977-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் மீன்வளக் கல்லூரி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஒப்பற்ற அங்கமாக உருவாக்கப்பட்டது. மீன்வளத்தில் ஒரு நாலாண்டு காலப் பட்டப் படிப்பைக் கொண்ட ஒரு கல்வித் திட்டத்தின் கீழ் இக்கல்லூரி தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டு மீன்வளத் துறைக்கும், அதன் முன்னேற்றத்திற்கும் பயன்பெறும் விதத்தில், மாநிலத்திலேயே ஒரே கல்லூரியாக இக்கல்லூரி துவங்கப்பட்டது. சிதம்பரனார் மாவட்டத்திற்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது. இக்கல்லூரி, இந்தியாவிலேயே இரண்டாவது கல்லூரியாகவும் அமைந்துள்ளது.

இக்கல்லூரியின் முக்கிய நோக்கம் இளங்கலை B.F. Sc மீன்வள பட்டதாரிகளையும், முதுகலை M.F. Sc மீன்வளப் பட்டதாரிகளையும் உருவாக்குவதோடல்லாமல், கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஆராய்ச்சி முடிவுகளை அவ்வப்போது மீனவர்களுக்கும், மீன்வள நிறுவனத்திற்கும் எடுத்துச் சொல்வதோடு அல்லாமல், தேவைப்படும் இடங்களில் மீனவர்களுக்குப் பயிற்சி அளிப்பதுமாகும். எனவே, மீன்வளக் கல்லூரியின் முக்கிய நோக்கம் கல்வி கற்பித்தல்; மீன்வளத்தின் முன்னேற்றத்திற்கு ஆராய்ச்சி செய்தல், செய்த ஆராய்ச்சியின் முடிவுகளைஎல்லா மீனவரும் அறியும் வண்ணம் செய்முறைப் பயிற்சி அளித்தல் என்ற மூவர்ணப் பட்டைக்குள் அடங்குவதைக் காணலாம். இக்கல்லூரியின் இத்தகைய பணிகள் கடந்த பத்தாண்டுகளாகச் செவ்வனே நடந்து வந்தபோதிலும், சிதம்பரனார் மாவட்டம் துவங்கப்பெற்ற திங்களிலிருந்து ஓராண்டிற்குள் இக்கல்லூரி ஆற்றியிருக்கும் பணிகளும் இனி ஆற்றவிருக்கும் அரிய பணிகளும் வருமாறு:—

சிதம்பரனார் மாவட்டம் துவங்கப்பட்ட இந்த ஓராண்டில் மீன்வளக் கல்லூரி ஐந்தாவது கட்ட இளங்கலைப் பட்டதாரிகளையும (இருபது பேர்களையும்) மூன்றாவது கட்ட முதுகலைப் பட்டதாரிகளையும் (ஆறு பேர்களையும்) தமிழ் நாட்டிற்குப் படைத்துள்ளது. இருபது இளங்கலைப் பட்டதாரிகளில் அறுவர் முதுகலைப் பட்டப்படிப்பிற்கும்; மூவர் தனியார் துறை நிறுவனங்களில் பணி புரிவதற்கும் சென்றுள்ளார்கள். இருவர் கற்ற கல்வியின் துணைக்கொண்டு சொந்தக் காலில் நிற்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில், மாநில தேசிய வங்கியின் துணையுடன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களின் எதிர்நீச்சல் மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இவர்களின் வெற்றி இக்கல்லூரியின் பாடத் திட்டம், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை உலகிற்குப் பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை. மற்றவர்கள் அரசு தனியார் துறை வேலைவாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றார்கள். முதுகலைப் பட்டதாரிகளில் மூவர் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள், தனியார் நிறுவனங்களில் பணியில் அமர்ந்துள்ளனர். இன்னும் மூவர் அரசு, தனியார் துறை வேலைகளை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றார்கள்.

மீன்வளக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகள் மூலம், அரிய கருத்துக்களைத் தமிழ் நாட்டிற்கும் பறைசாற்றியுள்ளது. கலப்பின மீன் வளர்ப்பின் மூலம் ஒரு எக்டேர் நன்னீர் பரப்பிலிருந்து, ஓராண்டில் பத்தாயிரம் கிலோ மீன்களில் உற்பத்தி செய்ய முடியும் என்ற ஆராய்ச்சி முடிவின் அடிப்படையாக, எளிய உள்நாட்டு விவசாயிகளுக்கு, மீன் வளர்ப்பதின் மூலம் அதிக லாபம் ஈட்ட முடியும் என்று குறிக்கோளுடன் திருநெல்வேலி வானொலி வாயிலாக நடத்தப்பட்ட வானொலி வேளாண்மைப் பள்ளியின் நேர்முகப் பயிற்சி முகாம், இக்கல்லூரியின் மூலமாக நடத்திக் காண்பிக்கப்பட்டது.

சிதம்பரனார் மாவட்டம் நீண்டதொரு கடற்பரப்பைக் கொண்ட மாவட்டமாக அமைந்துள்ளது. 100 கிலோ மீட்டர் வரை பரந்து கிடக்கும் கடற்கரை ஓர மீனவ குடியிருப்புகளின் மக்களின் பொருளாதார முன்னேற்றம் காண ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கடலோர மீன்வளச் சமுதாயம், இன்னமும் வறுமைக் கோட்டின் கீழ் இருப்பது கண்டறியப்பட்டது. மீனவப் பெண் மணிகளின் உபரி வருமானம் பெருக புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி உள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிதம்பரனார் மாவட்டத்தின் கீழ் வரும் மீனவக் கிராமங்களுக்குச் சென்று ஒரு மதிப்பீட்டின் கீழ், ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், ஐந்து பெண் மணிகள் மூலம் தெரிந்தெடுத்து, மொத்தம் பதினைந்து பெண் மணிகளுக்கு 15 நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பெண்மணிகள் தேர்வில், தமிழ் நாடு மீன்வளத் துறையின் அதிகாரிகளின் உதவியும் நாடப்படுகின்றது. இத்திட்டத்தை நடத்துவதற்கென அமெரிக்க நிறுவனங்களில் ஒன்றான ஃபோர்டு அறக்கட்டளை நிறுவனம் பண உதவி அளித்து வருகின்றது.



முதல் கட்டப் ப்யிற்சியாக, திரேஸ்புரம், புன்னக் காயல், தருவைக் குளம் கிராமங்களி லிருந்து, கிராமத்திற்கு ஐந்து பெண்மணிகள் வீதம் தெரிவு செய்து, மீன்களிலிருந்து உபரிப் பொருள்கள் தயாரிக்கும் விதம் குறித்து பயிற்சிஅளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தின்போது, பயிற்சியாளர்களுக்கு மான்யமும் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி யின் மூலம் மீனவப் பெண்மணி கள் ஒரு சிறிய கைத்தொழில் தொடங்குவதற்கென ஏற்பாடு கள் செய்யப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற பயிற்சி திட்டங் களை ஆறு மாதத்திற்கொரு முறை; ஒவ்வொரு முறையும் 15 பெண்மணிகளுக்கு கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம் முறையில் மூன்றாண்டுகளில் 90 பெண்மணிகளுக்குப்பயிற்சி அளிக் கப்படவுள்ளது. இப்பயிற்சியின் இணைத் திட்டமாக, ஒரு வாரப் பயிற்சி முகாமை, பெரிய தாழை அமலி நகர் மணப்போடுபோன்ற மீனவக் குப்பங்களிலும் விரிவு படுத்த எண்ணியுள்ளது. செப் டம்பர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக மூன்று மாதங் களில் இப்பயிற்சி முகாம்களை நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களுக்கும் கடலில் பிடித்த மீனகளை சுகாதார முறையில் எப்படிப் பாதுகாப்பது, பிடித்த மீன்கள் கெட்டுப் போகாமல் எவ்வாறு கரைக்கு கொண்டு வந்து சேர்ப் பது போன்ற துறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத் தகைய முதல்பயிற்சி முகாம் இம் மாவட்டம் துவங்கிய போது எடுத்துக்கொள்ளப்பட்டது. இப் பயிற்சி வகுப்புகளுக்கு, கடல் வாணிபக் கூட்டுக் கழக ஆணை யகம் ஏற்பாடுகள் செய்து, பயிற்சி அளிக்கும் பயிற்சியாளர் களுக்கும், பயிற்சியில் பங்கு பெறும் மீனவர்களுக்கும் மான் யமும், மற்ற பயிற்சிப் பொருள் களுக்குத் தேவைப்பட்ட பொருள் களுக்கும் பண உதவி அளித்தது. முதல் பயிற்சி முகாம், தமிழ்நாடு மீன்வளத் துறை அதிகாரிகளின் உதவியோடு, மீன்வளக் கல்லூரிக் குச் சொந்தமான ''டால்பின்'' என்ற இயந்திரப் படகு மூலம் நடத்தப்பட்டது. இதில் 90 மீன வர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட் டது. இதுபோன்ற பல பயிற்சி வகுப்புகள் வரும் ஆண்டுகளில் நடத்தப்பட உள்ளன.

இக்கல்லூரி துவங்கி 10வது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் விதத்தில் பத்தாவது ஆண்டு விழா விரைவில் கொண்டாடப் பட இருக்கின்றது. மீன்வளக் கல்வித் திட்டத்தின் மற்றொரு அங்கமாகிய உயர்கல்வித் திட்டத் தின் கீழ் டாக்டர் பட்டப்படிப்பு விரைவில் இக்கல்லூரியில் அமல் படுத்தும் திட்டம் உள்ளது. மீன் வள ஆராய்ச்சியில் புதிய உத்தி களைக் கையாண்டு, விரைவில் வளரும் வேக வளர்ச்சி மீன்களை உற்பத்தி செய்வதிலும்; தமிழ் நாட்டில் தேவைக்கேற்ற மீன் குஞ்சுகளை நவீன முறையில் உற்பத்தி செய்வதிலும், உற் பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சு களுக்கு, எளிய—விலைக் குறை வான உணவுப் பொருள்களைத் தயாரித்துக் கொடுக்கும் திட்டங் களை வரும் ஆண்டில் ஆராய்ச்சி யாக எடுக்கத் திட்டமிடப்பட்டுள் ளது.

கழிவு நீரிலிருந்து மீன்வடி நீர் தயாரித்து, கிராம கைத்தொழில் மூலம் அதிக அளவில் உற்பத்தி செய்து, முடிந்தால் வெளிநாட் டிற்கு ஏற்றுமதி செய்வதிலும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன கல்லூரியில் பயிற்சிபெறும், மீன வப் பெண்மணிகளின் துணை யோடு மீன், இறால், ஆழி, ஊறு காய் தயாரித்தல், மீன் பப்படம் முறுக்கு, பிஸ்கட் உற்பத்தி செய் தல் மீன் சூப் தயாரித்தல், மீன் வடிநீர் தயாரித்தல் போன்ற கைத் தொழில்களைச் சிதம்பர னார் மாவட்டத்தில் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.*

---

# வளர்ச்சிப் பணிகள்

**டி. ஜோசப்ராஜ்**

நெல் விளையும் நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தமைக்கப்பட்ட சிதம்பர னார் மாவட்டம் முத்து விளை யும் தூத்துக்குடியைத் தலைமை யிடமாகக் கொண்டது.

**போக்குவரத்து** : இம்மாவட் டத்தில் தூத்துக்குடி, கோவில் பட்டி, ஆகிய இரண்டு நகராட்சி களும் 12 ஊராட்சி ஒன்றியப் பகு திகளில் அடங்கியுள்ள 408 ஊராட்சிகளும், 206 பேரூராட்சி களும் உள்ளன. சிறிய பெரிய நகரங்களையும் மற்றும் ஊராட் சிப்பகுதிகளையும் இணைக்கும் 79 கி.மீ. தேசிய நெடுஞ்சாலை யும், 1234 கி.மீ. பெருவழிச் சாலையும், 1686.6 கி.மீ. ஊராட்சி ஒன்றிய சாலைகளும், 203.2 கி.மீ. ஊராட்சி சாலை களும் உள்ளன. மொத்தம் 1816 குடியிருப்புகள் உள்ளன. இவற் றுள் சாலை வசதியுற்ற குடி யிருப்புகள் 38. பெரும்பாலும் 1500 மக்கள் தொகைக்கும் அதிக மாகவுள்ள எல்லாக் குடியிருப்பு களுக்கும் பேருந்து வசதி செய் யப்பட்டுள்ளது. எல்லா மக்களும் பஸ் வசதிக்காக ஒரு கிலோமீட் டர் தூரத்திற்கு மேல் நடக்க வேண்டியதில்லை என்ற இலக் கினை நோக்கி சாலை அமைப் புப் பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**குடிநீர்வசதி** : இம்மாவட்டம் அமைக்கப்பட்ட ஆண்டு சரித்தி ரம் காணாத வறட்சியை சந் திக்க நேர்ந்துவிட்டது. இம்மா வட்டத்திலுள்ள 2,864 குடி நீர்க் கிணறுகளில் பல வறண்டு விட்டன. இம்மாவட்டத்திலுள்ள 572 குழாய்க் கிணறுகளும் 1,575 ஆழ்குழாய்க் கிணறுகளும் போர்க் கால விரைவுடன் அவ்வப்போது பழுது நீக்கி செயல்படும் நிலை யில் வைக்கப்பட்டன. அத்துடன் 284 கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டன. புதிதாக 27 கிணறுகள் தோண்டப்பட்டன. மேலும் 481 புதிய ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டன. இதுமட்டு மின்றி 127 கிராமங்களுக்கு ரூ. 33,85,000-செலவில் லாரிகள் மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வறட்சிக்காலக் குடிநீர்ப்பற்றாக்குறை சமா ளிக்கப்பட்டது.

**வறட்சிப் பணிகள்** : வறட்சிக் காலத்தில் மக்கள் விவசாய வரு வாயையும், வேலை வாய்ப்பை யும் இழந்து நின்றனர். உணவு தானியங்கள் உற்பத்தி அற்றுப் போன நிலையில் மக்களுக்கு உண வுத் தானியங்கள் நேரடியாகக் கிடைக்கும் வகையில் ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதி யளிப்புத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 4,05,500 மனித உழைப்பு நாட்கள் ஏற் படுத்தப்பட்டு 689.061 டன் அரிசியும், 778.116 டன் கோதுமையும் மக்களுக்கு நேரடி யாக விநியோகிக்கப்பட்டது.

# வளர்ச்சிப் பணியில் வங்கிகளின் பங்கு

சா. ஹா. சீ. மணி

இந்திய நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், வங்கிப் பணிகளையும் அரசாங்க வளர்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் நோக்கமாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வங்கியை முன்னோடி வங்கியாக அமைத்து காட்கில் குழுவின் சிபாரிசின்படி, 1969-ஆம் ஆண்டு முதல் இந்திய ரிசர்வ்வங்கி முடிவெடுத்து செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாவது:

ஒரு மாவட்டத்திலுள்ள இயற்கை வளம், சீதோஷ்ண நிலை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய வளர்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வங்கிகளின் உதவியுடனும், சம்பந்தப்பட்ட மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள், உதவியுடனும் திட்டங்களுக்குக் கடனுதவியும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

மாவட்டத்திலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வங்கிகளின் பணிகளை நாடுதல், சிறு தொழில், விவசாயம், கைவினைஞர்களுக்குப் போதிய கடன் வசதிகளை அளிக்கத் திட்டமிடல்.

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர. அவர்களின் வருவாய்ப் பெருக்கத்திற்கான வங்கிக் கடன்களுக்கு வழி வகுத்தல்.



வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கும், சிறுபான்மை மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வங்கிகளின் பணிகளை ஒருமுகப்படுத்துதல்.

முன்னுரிமைக் கடன்களான விவசாயம், சிறுதொழில், சிறு வியாபாரம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கரிம வாயுத் திட்டம், கல்வி கற்றோர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டம், நகர்ப்புற நலிந்தோர் சுய வேலைவாய்ப்புத்திட்டம்போன்றவைகளுக்கு மாவட்ட அளவில் திட்டம் தீட்டி அதைச் செயல்படுத்தும் முறையில் சிரமங்கள் ஏற்படின் அதனை மாதாந்திர ஆலோசனைக் குழுவில் வைத்து முடிவு கண்டு, திட்டங்களை முழுமையமாகச் செயல்படுத்த முன்னோடி வங்கி ஒரு கிரியா ஊக்கியாகச் செயல்படுவது அவசியமாகும்.

இதன்படி, பாரத ஸ்டேட் வங்கி நாட்டிலுள்ள 87 மாவட்டங்களில் இந்த முன்னோடி வங்கிப்பொறுப்பினை ஏற்றுள்ளது.

சிதம்பரானார் மாவட்டம் 20.10.86-இல் துவக்கிய நாள் முதல் இந்த மாவட்டத்தின் முன்னோடி வங்கி பொறுப்பினைப் பாரத ஸ்டேட் வங்கி ஏற்றுள்ளது. தமிழகத்தில் இந்த முன்னோடி வங்கி பொறுப்பினை முதன் முறையாக பாரத ஸ்டேட் வங்கி சிதம்பரனார் மாவட்டத்தில் ஏற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஓராண்டுக் காலத்தில் பாரத ஸ்டேட் வங்கி, இம்மாவட்ட வளர்ச்சிக்காகச் செய்த பணிகள் பற்பல, குறிப்பிட்ட சில முக்கிய திட்டங்களை இந்த நல்ல சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

### பட்டு வளர்ப்புத் திட்டம்

இம்மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியத்தில் 8 ஒன்றியங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் என ஆய்வு செய்து இருக்கின்றது. இந்த வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றதும் லாபம் ஈட்டித் தரும் விவசாயத் தொழில் என்னவென்று ஆராயும் காலத்தில் ''மல்பேரி'' விவசாயமும், பட்டு புழு வளர்த்து பட்டுக் கூடு உற்பத்தி செய்யும் தொழிலும் சாலச் சிறந்தது என ஆராய்ந்து முடிவுகட்டி 1 கோடி ரூபாய் கடனுதவியும், மூன்றாண்டுகளுக்குத் (1987.1990) திட்டம் ''operation sericulture என்று பெயரிட்டுத் தீட்டப்பட்டு நிறைவேற்றப் பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,250 ஏக்கர் 'மல்பேரி' பயிரிடுவதற்கும் அதன் மூலம் சுமார் 10,000 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளைத் தருவதற்கும், விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு நிகர லாபமாக ரூ. 10,600- ஈட்டுவதற்கும் வழி வகுக்கின்றது.

### மீன் வளர்ச்சி மற்றும் மீன் பதனிடும் தொழில் திட்டம்

மீன் வளம் பெருகியுள்ள சிதம்பரனார் மாவட்டத்தில் மீனவர்களுக்குப் படகு வாங்குதல், படகுகளில் ஆயில் இன்ஜின் பொருத்துதல், மீன்வலைவாங்கக் கடனுதவி செய்தல் ஆகிய திட்டங்களைத்தீட்டி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம்மூலமும், மீன் துறையின் மூலமும் மானியத்துடன் கடன் வசதியளிக்கப் பட்டுள்ளது. மேலும் மீனவப் பெண்மணிகளுக்கு மீன் பதனிடும் தொழில் பயிற்சி முகாம், தூத்துக்குடி வேளாண்மைப் பல்கலைக் கழக மீன் வளர்ச்சிக் கல்லூரியின் உதவியுடன் மீன் பதனிடும் தொழிற் பயிற்சி முகாம் அமலி நகர், மணப்பாடு, பெரியதாழை ஆகிய ஊர்களில் நடத்தியுள்ளது. அமலி நகரில் 16.9.87 அன்று இந்தப் பயிற்சி முகாம் துவக்கப் பட்டு ஒரு வாரத்திற்கு நடத்தப் பட்டது. மற்ற இரு ஊர்களுக்கு விரைவில் பயிற்சி முகாம்கள் நடத்தப்படும். பயிற்சி பெற்றோருக்கு வங்கிக் கடனுதவி அளித்து உதவி புரியும்.

### பால்வளத் திட்டம்

விவசாயிகளுக்குப் பால் மாடு வளர்த்து கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் பால், திருநெல்வேலியில் உள்ள பால் பதனிடும் அலுவலகத்திற்கு விற்பனைக்குக்

தொ

கொடுத்து அவர்களின் வருமானத்தைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் 280 பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. எட்டையபுரத்தில் பால் குளிர்விக்கும் நிலையம் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலாகப் பால் உற்பத்தியைப் பெருக்கி விவசாயிகளின் உபரிவருமானப் பெருக்கத்திற்கு வழி வகுக்கின்றது. இதேபோன்று செம்மறி ஆடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, கோழிப் பண்ணை வைப்பதற்கும் நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் தாலுகாக்களில் வாழை புது நோக்குத் திட்டம்:

மேற்கண்ட தாலுகாக்களில் வாழை அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. ஆனால் காற்றடிக் காலங்களில் வாழை மரங்கள் சாய்ந்து விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டத்தை விளைவிக்கின்றன. இதனைத் தடுக்க வாழை மரங்களுக்குச் சவுக்கு மர முட்டு கொடுத்துக் காற்றடிக்காலங்களில் வாழையைச் சாயாமல் காப்பாற்ற முடியும். இதற்கு வாழை பயிரிடக் கடனுதவியுடன் சவுக்கு மரங்கள் கொடுத்துக் காற்றடிக்காலங்களில் அக்கடன்களை மத்தியக் கால கடன்களாக வசூல் செய்வதற்குத் திட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மானாவாரி விவசாயத் திட்டம்**

மழை நீரை நம்பியிருக்கும் மானவாரி விவசாயிகளுக்கு அதிக லாபம் ஈட்ட மானாவாரியில் முற்போக்கோடும் நவீன முறையிலும் விவசாயம் செய்து வெற்றியடைய சங்கரலிங்கபுரம், கழுகாசலபுரம் கிராமத்தில் ஒருங்கிணைந்த தீவிர மானாவாரி விவசாயத் திட்டத்தினைச் செயல்படுத்த முன் வந்துள்ளோம்.

**பயன்படாத நிலங்களில் விவசாயப் பணிகளை ஏற்படுத்தும் திட்டம்**

விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்கள் இம் மாவட்டத்தில் 16,886 எக்டேர் நிலம் உள்ளது. அவைகளில் சவுண்டை, கருவேல், புரோசாபிஸ் முள் மரம் போன்றவைகளை விளைவித்து 5 வருடங்களுக்குப் பின் நல்ல வருமானம் தரக்கூடியவைகளாக மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**எண்ணெய் வித்துக்கள், பயறுகள் உற்பத்தித் திட்டம்**

எண்ணெய்வித்துக்களான, எள், கடலை, சூரியகாந்தி, தென்னை போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும், உளுந்து, பாசிப் பயறு, போன்ற பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்கவும் தீவிர விவசாயத் திட்டம் அமலாக்கப்பட்டு வருகின்றது.

**வளர்ச்சிப் பணிகளுக்கு வங்கிகளின் பங்கு**

முன்னுரிமைக் கடன்களுக்கான 1986-ஆம் ஆண்டு ரூ. 23.31 கோடி மாவட்டத்திலுள்ள வளர்ச்சிப் பணிகளுக்குத் திட்டமிட்டு அவற்றை மாவட்டத்திலுள்ள அனைத்து வங்கிகளுக்கும் செயல்படுத்த பிரித்துக் கொடுக்கப்பட்டது. இந்த இலக்கீட்டில் ரூ. 24.52 கோடி கடனுதவியளித்துள்ளது. 1987-ஆம் ஆண்டுக்கு வங்கிகளின் முன்னுரிமைக் கடன் திட்டமாக முன்னோடி வங்கி ரூ. 27.60 கோடிக்குத் திட்டம் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது. இவற்றில் 1.1.87 முதல் 20.6.87 உடன் முடிவடைந்த அரையாண்டிற்கு ரூ. 18.09 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆலோசனைக்குழுக் கூட்டங்கள்**

முடிவுற்ற ஓராண்டுக் காலத்தில் இம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் ஒவ்வொரு மாதமும் தவறாது வங்கிகளின் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, பல்வேறு திட்டங்களைப் பற்றியும், வளர்ச்சிப் பணிகளைப்பற்றியும் விவாதித்துப் பிரச்சனைகள் இருப்பின் தகுந்த முடிவு கண்டு நடத்தியுள்ளோம். இது தவிர 7 வங்கியாளர்களின் சிறப்புக் கூட்டங்களும், பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் அளிக்க வங்கியாளர்களுக்குப் பயிற்சி முகாமும் நடத்தப்பட்டுள்ளன.







**வறட்சிக்கு வங்கிகளின் பணி**

மாவட்டத்தில் நிலவி வரும் வறட்சியைச் சமாளிக்கத் துரித காலத் திட்டமாக ரூ. 14.10 கோடிக்கு உடனடியாக வங்கிகள் கடனுதவி அளிக்கத் திட்டம் தீட்டப்பட்டு, கடந்த 3.9.87 அன்று நடந்த வங்கிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி நடப்புக் காலப் பயிர்க் கடன், மாட்டுத் தீவனம் வாங்கி கடனுதவி அளித்தல் மாற்றுப் பயிர்க் கடனுதவித் திட்டம், விவசாயக் கருவிகள், பம்பு செட் அமைத்தல் போன்றவைகளுக்குக் கடனுதவி அளிக்க முடிவெடுக்கப்பட்டது. கடந்த செப்டம்பர் (1987) மாதத்தில் மட்டும் ரூ. 1.57 கோடி வறட்சிப் பணிகளுக்கு வங்கிகள் கடனுதவி அளித்திருக்கின்றன. மேலும் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றியமைக்க வங்கிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# நாதரத்தினம்

பேரறிஞர் அண்ணா அவர்களால்பாராட்டப்பெற்ற மறைந்த நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் பிறந்தநாள் விழா தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தின சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் 6.10.87 அன்று கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு வந்திருந்தோரை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திரு வி.எஸ். இராகவன் அவர்கள் வரவேற்றார்.

கலைமாமணி திரு டி.எஸ். லட்சப்பா, தமிழ் வளர்ச்சி -பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஒளவை நடராசன், திரு பித்துக்குளி முருகதாஸ், திரு நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன் ஆகியோர் நாதசுரமேதை பற்றிச் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு கல்வி, சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது மற்ற பல இடங்களுக்கும் கலைஞர்களை அனுப்பி சிறப்புச் செய்து வருகிறது. நாதசுர மேதை இராசரத்தினம், இசையைத் தமிழகத்தில் மட்டுமல்லாது உலக முழுவதும் பரப்பினார். இராசரத்தினம் பிறந்த நாளில் அவரது சிறப்புக்களை மனதில் கொண்டு இசைத் துறையில் உள்ளவர்கள் செயல்பட வேண்டும்.

''இயல் இசைத்துறையில் சேவை புரிநத இராசரத்தினத்திற்கு பிறந்த நாள் விழா கொண்டாடுவதுபோல், நாட்டியத் துறையில் சிறந்து விளங்கிய **ருக்மணிதேவி பாலசரசுவதி** ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களும் இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கொண்டாடப்படும் என்பதை மாண்புமிகு புரட்சித்தலைவர் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.''

# நாதசுர மேதை டி.என்.ராஜரத்தினம்



- டி என். ராஜரத்தினம் அவர்களின் நினைவாக அவர்தம் துணைவியார் திருமதி டி என். ஆர். சாரதாம்பாள் அவர்களிடம் ரூ.5000 கொண்டபண முடிப்பை, தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் வழங்கினார்.
- விழாவில் சிறப்புரையாற்றிய நாமகிரிப்பேட்டை கே.கிருஷ்ணன் அவர்கள் ரூ. 3,000-ஐ இராசரத்தினம் துணைவியார் அவர்களிடம் வழங்கினார்.
- உள மகிழ்ச்சிக்குச் சென்னை மற்ற இடங்களில் சபாக்கள் இருப்பது போன்று அரசும் சபாக்கள் நடத்த உள்ளது.
- பேரறிஞர் அண்ணாவால் நாதசுர மேதை இராசரத்தினம் அவர்கள் ''நாதரத்தினம்''என்று அழைக்கப் பட்டார்.
- நாதசுரமேதை இராசரத்தினம் அவர்கள் 'கவிகாளமேகம்' திரைப் படத்தில் நடித்துள்ளார்.



ரூ 21 கோடி செலவில்

# சோயா பீன்ஸ்

## பல்தொழில் நிறுவனம்

**த**மிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), சக்தி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களுடன் கூட்டுத்துறையில் ரூ.21 **கோடியில்,** சோயா பீன்ஸ் பல்தொமில் நிறுவனம்ஒன்றை ஆரம்பிப்பதற்கான **ஒப்பந்தத்தில்** 5.10.87 அன்று **கையெழுத்திட்டது.**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழகத்தில் முதன் முறையாக 300 டன்கள் ஒரு நாளில் அரவை திறன் கொண்ட அதி நவீனமான சோயா பீன்ஸ் ஆலையை, கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் மார்ச்சி நாயக்கன்பாளையம் கிராமத்தில் ஆரம்பித்துள்ளது. சக்தி சுகர்ஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களின் முயற்சியால் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு அரசால் சிமெண்ட் மற்றும் எஃகு உற்பத்தித் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். 1965-ஆம் ஆண்டு சிறு அளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் உரத் தொழிற்சாலை, மின்அணு சாதனங்கள், இரசாயனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் போன்ற துறைகளில் பல நிறுவனங்களை நிறுவியுள்ளது. இன்று டிட்கோ நிறுவனங்களின் மொத்த முதலீடு பொதுத்துறை கூட்டுத்துறை நிறுவனங்களையும் சேர்த்து ஏறக்குறைய ரூ. 750 கோடியைத் தாண்டி உள்ளது. டிட்கோவின் பங்கு மட்டும் அதில் சுமார் ரூ. 90 கோடி அளவிற்கு 45 தொழில் திட்டங்களில் உள்ளடங்கி உள்ளது. இதில் 38 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 7 திட்டங்கள் முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

இதுகுறித்து 'டிட்கோ' நிறுவனத் தலைவர் திருமதி ஈ. வெ. கி. சுலோசனாசம்பத் அவர்கள் கூறியதாவது;

''புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகி வருகிறது. அடுத்து வரும் ஆண்டுகளில் ரூ 500 கோடி மூலதனத்தில் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பல புதிய தொழில் திட்டங்களான 210 மெகாவாட் அனல் மின் நிலையம், பென்சிலின் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை, டைட்டானியம் டை ஆக்ஸைடு தொழிற்சாலை, புரொப்பிலின் என்ற இரசாயனத்தைச் சார்ந்த தொழிற்சாலை, பிரக்டோஸ் சிரப் தயாரிக்கும் தொழிற்சாலை தொலைபேசி கம்பி வடம் தயாரிக்கும் தொழிற்சாலை போன்றவைகளை 'டிட்கோ' நிறுவனம் ஏற்படுத்த உள்ளது.

''விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களில் நீண்டகால அனுபவமும், விவசாயிகளுடன் நேரடித் தொடர்பும் கொண்டுள்ள டாக்டர் மகாலிங்கம், தமிழகத்தில் முதல் முறையாக இப்புதிய தொழிலான சோயா பீன்ஸ்

ஆலையைத் துவங்குவதற்கு முடிவு செய்தார். கடந்த 5ஆண்டுகளாகச் சக்தி சுகர்ஸ் நிறுவனத்தின் விதைப் பிரிவு கோவை, பெரியார், அண்ணா மற்றும் மதுரை மாவட்டங்களில் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டு சோயா பீன்ஸைப் பயிரிடச் செய்துள்ளனர். விவசாயிகளிடமிருந்து இம்முயற்சிக்குப் பெருத்த ஆதரவும், உற்சாகமும் கிடைத்துள்ளது. தமிழக அரசின் விவசாயத் துறை மற்றும் எண்ணெய் வித்துத்துறைகளின் ஆதரவும் ஊக்கமும் கிடைப்பதன் பயனாக இத்திட்டத்திற்குத் தேவையான 1.5 இலட்சம் எக்டேர் பரப்பளவில் சோயா பீன்ஸ் பயிர் செய்யும் இலக்கை அடைய நிறுவனம் உறுதி கொண்டுள்ளது.

### தாய் மொழியில் தொழில் நுட்பக் கல்வி

தமிழ் வாழத் தமிழன் வாழவேண்டும். அவனது வாழ்வு சிறக்க அவனது பொருளாதாரம் உயர வேண்டும். இதற்குத் தேவையான அறிவியல் - தொழில் நுட்பக் கல்வியை அவன் தன் தாய் மொழியில் பெற்றாக வேண்டும்.

குன்றக்குடி அடிகளார்.

### இடர்ப்பாடு இல்லை

மருத்துவப் பாடங்களையும் மற்ற அறிவியல் பாடங்களையும் தமிழில் கற்பிப்பதில் இடர்ப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. முயற்சிதான் தேவை.

டாக்டர் ஆறுமுகம்
மருத்துவக் கல்வி இயக்குநர்.
(தமிழ்ப் பல்கலைக் கழக அறிவியற் கருத்தரங்கத்தில்)

''ஆலை நிறுவுவதற்காக 60 ஏக்கருக்கும் அதிகமான நிலம் வாங்கப்பட்டு கட்டட வேலை துவங்கப்பட்டுவிட்டது. இவ்விடத்தில் ஆலைக்குத் தேவையான தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் உள்ளன. ஆலைக்குத் தேவையான இயந்திரம் மற்றும் உறுப்புக்கள் பெரும் பகுதி செய்து கொடுக்கும் பம்பாயில் உள்ள யூரஸ்ட்ரா இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஆகி உள்ளது. மேற்கு ஜெர்மனியிலுள்ள எக்ஸ்ட்ராக்ஷன்ஸ் டெக்னிக், சுவிட்சர்லாந்தில் உள்ள இண்டர்ப்போண்டா ஆகிய உலகப் புகழ்பெற்ற சோயா தொழில் நிறுவனங்களின் தொழில் நுட்ப உதவி இந்நிறுவனத்திற்குக் கிடைத்துள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 400 பேருக்கு நேர்டி வேலை வாய்ப்பும், கிராமப்புறத்திலுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

''இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் சோயா பீன்ஸ் விதையை அரவை செய்து கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்யும்:

1. சுத்திகரிக்கப்பட்ட சோயா எண்ணெய் -ஆண்டொன்றுக்கு 15,000 டன்கள் 2. உணவுக்கேற்ற சோயா மாவு-ஆண்டொன்றுக்கு 15,000 டன்கள் 3.எண்ணெய் நீக்கிய சோயா பிண்ணாக்கு - ஆண்டொன்றுக்கு 60,000 டன்கள்.

''இத்திட்டத்தினால் எண்ணெய் இறக்குமதி செய்வது ஓரளவு தவிர்க்கப்படுவதுடன் சோயா பிண்ணாக்கு ஏற்றுமதியினால் அன்னியச் செலாவணியும் கிடைக்கும். இதன் காரணமாக இத்திட்டம் தேசிய கண்ணோட்டத்தில் முன்னுரிமை பெறுகிறது. முழுத் திறனில் உற்பத்தி செய்யப்படும் போது இந்த ஆலையின் விற்பனை ஆண்டொன்றுக்கு ரூ. 60 கோடி அளவை எட்டும். இதில் ஏற்றுமதி ரூ. 14 கோடியும் இறக்குமதிக்குப் பதிலாக உள்நாட்டு உற்பத்தி ரூ. 34 கோடியும் அடங்கும். ரூ. 21 கோடி மதிப்பீட்டில் ஆரம்பித்துள்ள இத்திட்டத்திற்கு மூலதனமாக டிட்கோ ரூ. 2.12 கோடியும், டாக்டர் மகாலிங்கம் அவர்கள் ரூ. 2.04 கோடியும் முதலீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. அகில இந்திய நிதி உதவி நிறுவனங்களும், வங்கிகளும் ரூ. 12.10 கோடியைக் கடனாக அளிக்கின்றன. ரூ. 4.00 கோடிக்குப் பங்குகள் 1988ஆம் ஆண்டு பிற்பகுதியில் பொதுமக்களுக்காக வெளியிடப்படும். இத்திட்டம் முடிவடைந்து, 1989 பிப்ரவரி மாதம் உற்பத்தி தொடங்கப்படும்.

''மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களின் சீரிய தொழிற் கொள்கைகளினாலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசின் சுமுகமான உறவுகளினாலும் தமிழ்நாட்டில் பல பெரிய தொழிற் திட்டங்களை நிறைவேற்றும் வாய்ப்பு இருக்கிறது. 'சக்தி சோயாஸ்' போன்ற சிறந்த தொழிற் திட்டங்களைத் தமிழ்நாட்டில் நிறுவ டிட்கோ, தொழில் முனைவோரை வரவேற்கிறது.''


'தமிழரசு'
தமிழ் - மாதம் இருமுறை
சந்தா விவரம்
ஆண்டுச் சந்தா ரூ. 24.00
6 மாதச் சந்தா ரூ. 12.00
'தமிழரசு' - ஆங்கிலம்
ஆண்டுச் சந்தா ரூ. 12.00
6 மாதச் சந்தா ஏற்பதில்லை.
—சந்தா தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.
அனுப்பவேண்டிய முகவரி :
உதவி இயக்குநர்,
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

**"மாணவர் பக்கம்"**



## விளையும் பயிர்

சென்னைப் புதுக்கல்லூரியில், தமிம் முதுகலை இரண்டாவ தாண்டு பயிலும் மாணவர் ந. இளங்கோ. இவர் கட்டுரை, பேச்சுப் பேரட்டிகளில் பரிசும், பாராட்டும் பெற்றுள்ளார்.

சென்னைக் கம்பன் கழகம் நடத்திய 1986-87ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான 'திருக்குறள்' கட்டுரைப் போட்டி மற்றும் ''சீறாப்புராணம்'' கட்டுரைப்போட்டியில் முதல்பரிசும், 1979ஆம் ஆண்டு தமிழக அரசு நடத்திய தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசும், அண்ணல் காந்தியடிகள் 119-வது பிறந்தநாளை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறை நடத்திய (2.10.87) அனைத்துக் கல்லூரி நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் முதல் பரிசும் பெற்றுள்ளார்.

1980ஆம் ஆண்டு தமிழகக் கல்வித்துறை நடத்திய நேரு பிறந்தநாள் பேச்சுப் போட்டியில் இரண்டாவது பரிசு, 1981ஆம் ஆண்டு சென்னை சங்கரலிங்க நாடார் பள்ளி நடத்திய திருக்குறள் பேச்சு, கட்டுரைப்போட்டிகளில் முதல் பரிசுகளும் பெற்றுள்ளார்.

1986இல் சென்னைக் கிறித்துவக்கல்லூரி நூற்றாண்டு விழாக் கட்டுரைப் போட்டியில் இரண்டாவது பரிசும், 1978ஆம் ஆண்டு கல்வித்துறை நடத்திய அண்ணா பிறந்தநாள் விழா பேச்சுப் போட்டியில் இரண்டாவது பரிசும், 1987-ல் அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்காக புதுக் கல்லூரித் தமிழ்மன்றம் நடத்திய இரண்டு பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசுகளும் பெற்றுள்ள இவர், இந்தோ-சோவியத் கலாச்சார மையம் நடத்திய கட்டுரைப் போட்டிகளிலும் இரண்டுபரிசுகள் பெற்றுள்ளார்.

## போது அறிவுத் துணுக்குகள்

வாசிலைன் எதற்குப் பயன்படுகிறது?
களிம்பு, மருந்துகள் தயாரிக்க.

கண்ணின் கருப்புப்படலத் தசைகள் எவ்வகையைச் சேர்ந்தவை?
சுருங்கு_தசை

எலக்ட்ரான் நுண்ணோக்கியின் உருப்பெருக்கம் எவ்வளவு?
60,000 மடங்கு.

கண்ணின் விழித்திரையில் விழும் பிம்பம் எத்தகையது?
சிறிய தலை கீழ் மெய் பிம்பம்.

ஒளிரும் குழாய் விளக்குகளில் உள்ள ஆவி எது?
பாதரச ஆவி.

தமிழ்நாட்டில் அனல் மின்சாரம் எங்கு உற்பத்தி செய்யப்படுகிறது?
சென்னை, எண்ணூர், நெய்வேலி, தூத்துக்குடி.

எலியை அழிக்கும் நச்சுப் பெர்ருளாக எவ்வகை பாஸ்பரஸ் பயன்படுகிறது?
வெண் பாஸ்பரஸ்.

மிக மிக நுண்ணிய பொருள்களைப் பெரியதாக்கிப் பார்க்க உதவும் பொருள் யாது?
எலக்ட்ரான் நுண்ணோக்கி.

தொடர் இணைப்பு முறை பயன்படுத்துவதற்கு எடுத்துக்காட்டுகள் கொடுக்கவும்!
தெருவிளக்கு, அலங்கார விளக்குத் தொடர்.

# பாரதம் தழைக்கச் செய்வோம்!

**மனசை ப. கீரன்**

மண்ணும் விண்ணும் கடலோடும்
வாழும் பறவை, உயிரினத்தும்
எண்ணம் சிறந்தோன் மனிதனன்றோ?
எதிலும் உயர்ந்தோர் நாமன்றோ?

உலகம் துயரில் ஆழ்ந்திடவோ,
உலுக்கும் வறுமை சூழ்ந்திடவோ,
கலகப் போர்கள் பெருக்கிட்டுக்
கலங்கல் அழகோ, சொல்லுங்கள்!

உங்கள் கையால் முடிக்காமல்
உறங்கும் திறனை உசுப்புங்கள்!
தங்க நாடு பாரதத்தைத்
தழைக்கச் செய்ய விழையுங்கள்!

சுமையால் தினறும் பாரதத்தைத்
சுமக்கும் தோள்கள் உருவாக்கி
இமையா உழைப்பால் சுமந்திடுவீர்!
ஈடிலா நாடாய் அமைத்திடுவீர்!



# முயலும் மானும்



ஒரு காடு இருந்தது. அக் காட்டில் மிருகங்கள் வாழத் தொடங்கியபோது, மான்தான் அவற்றின் தலைவனாகஇருந்தது. ஒரு சமயம் ஆண்மானும், அதன் மனைவியும் காட்டுவெளியில் பேசிக் கொண்டிருந்தன. அப் பக்கமாக ஒரு முயல் வந்தது. மான்கள் பேசிக் கொண்டிருப் பதை ஒட்டுக் கேட்கவிரும்பியது. ''அவர்கள் என்னதான் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கலாமே!'' என்று எண்ணி யது முயல். எனவே ஒரு மரத் தடியில் அது ஒளிந்து கொண்டது.

''என்னிடம் சில கொம்புகள் இருக்கின்றன. அவற்றை வேறு மிருகங்களுக்குத் தர வேண்டும். ஆனால் நிறைய மிருகங்கள் இருக் கின்றன; என்னிடம் இருப்பதோ ஒரு சில' கொம்புகள்தான். யாருக்குக் கொடுப்பது?'' என்றது ஆண்மான்.

அதனைக் கேட்ட முயல் 'எனக்குக் கொம்பு கள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! மற்றவர்களைவிட நான் மட்டமா?'' என்று நினைத் தது.

'யாருக்கு இந்தக் கொம்பு களைத் தருவது?' என்று மனைவி யிடம் மறுபடியும் கேட்டது மான்.

மானின் மனைவி பதில் கூறு வதற்கு முன்பு, முயல் ஏதோ கூற வாயைத் திறந்தது. நல்ல காலம் அதற்குள் மானின் மனைவி பதி லளித்தது. 'அவற்றைச் சின்ன மான்களுக்குத் தந்து விடுவோம். அவை நம் உறவினர்கள். எனவே அவற்றிற்குத்தான் தர வேண்டும்' என்றது மனைவி.

''சரி, பெரிய கொம்புகளை யாருக்குக் கொடுப்பது?''

மானின் மனைவி பதில் கூற ஆரம்பிப்பதற்குள் பொறுமை யற்ற முயல் மரத்தடியிலிருந்து ''பெரிய கொம்புகளை எனக்குக் கொடுத்து விடுங்கள்'' என்று உரக்கக் கூவியது.

''நீ என்ன கூறுகிறாய் என் பதை உணர்ந்துதான் பேசு கிறாயா? உனக்குக் கொம்பு ஏன் வேண்டும்? அதை வைத்துக் கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்றது பெரிய மான்.

''எனக்குக் கொம்புகள் மிகவும் தேவை. என் எதிரிகளைப் பய முறுத்துவதற்கு, எல்லோரும் என்னைக் கண்டு நடுங்குவதற்கு, கொம்புகள் மிக அவசியம்'' என்றது முயல்.

''சரி அப்படியானால், இந்தக் கொம்புகளை எடுத்துக் கொள்'' என்று கூறி முயலிடம் கொம்பு களைக் கொடுத்தது ஆண் மான்.

கொம்பு கிடைத்து விட்ட மகிழ்ச்சியால் முயல் இங்கும் அங்கும் துள்ளிக் குதித்துக் கொண்டு இருந்தது. அப்போது மரக்கிளையின் துண்டு ஒன்று அதன் தலையில் விழுந்தது.

அந்த மரத்துண்டு முயலின் மீது விழுந்ததோ இல்லையோ. முயல் பயந்து போய் ஓடத் தொடங்கியது. ஆனால் அத னால் ஓட முடியவில்லை. ஏனெ னில் அதன் கொம்புகள் முட் புதருக்குள் சிக்கிக் கொண்டன. முயல் ஓட முடியாமல் அங்கேயே படுத்துக் கொண்டு 'ஓ' என்று அலறி அழுது கொண்டிருந்தது.

மான்களோ 'விழுந்து விழுந்து' சிரித்தன.

''என்ன முயலாரே, பிரயோ சனம் இல்லை! நீ என்னவோ தைரியசாலி என்று நினைத் தேன். ஆனால் நீயோ சுத்தக் கோழை. இப்படிப்பட்ட கோழைக்குப் பெரியகொம்புகள் இருந்து என்ன பயன்? ஆகவே உனக்கு நீளமான காதுகளைத் தருகிறேன். அப்போதுதான் உன்னை எல்லோரும் ஒட்டுக் கேட்பவன் என்று அறிவர்'' என்று நீளமான காதுகளை முயலுக்கு மான் கொடுத்தது.

அதனால்தான் முயலுக்குக் கொம்புகள் இல்லை; நீண்ட காதுகள் மட்டும் இருக்கின்றன!

—ஒரு ரஷ்யக் கதை

## தொடரும் இருளில் ஓர் புலரும் உதயம்

ஆசிரியர்: பெரியவர் இராம மூர்த்தி,
வெளியீடு: கலைஞன் பதிப்பகம்
10, ஹென்ஸ்மென் ரோடு,
தியாகராய நகர்
சென்னை- 600017

விலை ரூ. 14 பக்கம் 188

அலைபாயும் மனத்துக்கு ஆன்மீக நெறியைக் காட்டுகின்ற நூல் இது. 'துன்பம் தோற்றம் பற்றே காரணம்' என்கிறது மணிமேகலை நூல். அந்த அடிப்படையில், மனம் என்னும் குரங்கு என்னென்ன ஆட்டம் போடுகிறது என்பதையும், அந்த ஆட்டத்திலிருந்து விடுபடுவதற்குரிய நெறிமுறைகளையும் இந்நூல் போதிக்கிறது.

கட்டுரை வடிவில் இது அமைந்திருந்தாலும் பல இடங்களில் நூலாசிரியர் தெரிவிக்கும் கருத்துக்கள் பொன்மொழிகளாக ஒளி வீசுகின்றன. சான்றுக்கு ஒரு சில:

''மனித மனம் எதிலுமே நிறைவு அடைவது என்பது நிச்சயம் கிடையாது. கிடைக்காத வரை அந்தப் பொருளைப்பற்றிய ஏக்கம்! கிடைத்த பிறகு அடுத்த பொருளைப் பற்றிய ஏக்கம்''

''சமுத்திரத்தில் மூழ்கினால் முத்தெடுக்கலாம். ஆனால் சாக்கடையில் மூழ்கினால் சங்கடத்தையே சேருவாய்''

''ஏமாறுவதிலும் தனிச் சந்தோஷம் காண்பது நமது சமுதாயத்தின் தனிப்பெரும் வரப் பிரசாதம் ஆகும்''

''வியாபாரங்களில்நஷ்டமாகிப் போனால் வியாபாரிக்குத்தான் நஷ்டம். ஆன்மீக வியாபாரத்திலே நஷ்டமாகிவிட்டால், வியாபாரிக்கு எத்தகைய பிரச்சினையும் இல்லை; மாறாக வாடிக்கையாளருக்குத்தான் தொடர்ந்து நஷ்டம்''

ஆன்மீகம் என்றால் ஆழம் காண முடியாத கடல் என்று அச்சுறுத்தும் பாணியில் சொல்லாமல், நமது வாழ்க்கை நிகழ்ச்சிகளை வைத்தே எளிய முறையில் விளக்கம் செய்திருப்பது எளிதில் மனத்தில் பதிந்து விடுகிறது.

பல்வேறு குட்டிக் கதைகளின் மூலம் தாதபரியத்தைத் தக்க விதத்தில் விளக்கியிருக்கிறார் நூலாசிரியர். வாசகருடன் நேரடியாகப் பேசும் நடையில் அமைக்கப்பட்டிருப்பது நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது. — தமிழ்ப்பித்தன்

## கற்கண்டுக் கதைகள்

ஆசிரியர்: டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி
விற்பனை உரிமை: பாரிநிலையம்

விலை: ரூ. 8 பக்கம்: 80

பத்துச் சிறுகதைகளின் தொகுப்பு. சிறுவர்களுக்காக எழுதப்பட்டுள்ள இந்த நீதிக்கதைகள் பெரியவர்களுக்கும் பயன் படும் தகுதி பெற்றுள்ளன.

'டெலிவிஷம்' என்னும் கதை மனித சமுதாயத்தின் போலித்தனத்தைத்தக்க விதத்தில் சுட்டிக் காட்டுகிறது.

ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும்-அக்கதை வலியுறுத்தும் நீதியைச் சுருக்கமாக அறிமுகம் செய்திருப்பதுபாராட்டுக்குரியது.

படிக்கப்படிக்கச் சுவைதரும் இக்கதைகளுக்குக் கற்கண்டுக்




கதைகள் என மகுடமிட்டது பொருத்தம்தான்.

## புரட்சிக்கவி

ஆசிரியர்: வசந்தகுமார்
வெளியீடு: வள்ளுவர் பதிப்பகம்
திருவள்ளுவர் நகர்
பண்ணுருட்டி
தென்ஆர்க்காடு மாவட்டம்

விலை ரூ. 10 பக்கம் 108

பாவேந்தர் பாரதிதாசன்அவர்களின் 'புரட்சிக்கவி' காவியத்தை நாடகம் ஆக்கியுள்ளார் நூலாசிரியர்.

21காட்சிகளைக் கொண்ட இந் நாடகம், படிப்பதற்கு மட்டுமல்ல, நடிப்பதற்கும் ஏற்றது என்பதை உரையாடல்கள் தெளிவாக்குகின்றன.

பாவேந்தரின் கவிதை வரிகளைக்கொண்டே பல இடங்களில் உரையாடல்கள் அமைக்கப் பெற்றிருப்பது-பாவேந்தரின் நூல்களில் இந் நூலாசிரியர்க்கு உள்ள பரிச்சயத்தையும் பாவேந்தரிடம் உள்ள ஈடுபாட்டையும் புலப் படுத்துகின்றன.

சங்கத்தமிழ் இந்நூலில் அருவியெனக் குதித்து வருகிறது; ஆறாகப் பெருகுகிறது; அமுதமழையாகப் பொழிந்து வருகிறது.

உவமைகள், உருவங்கள், வாதங்கள் உரையாடலில் வந்து விழுகின்றன.

மன்னர் குல மங்கையின் புரட்சிச் சிந்தனையைக் காட்சிக்குக் காட்சி எடுத்துரைக்கிறது இந்தச் சுவையான நாடகநூல்.

— எஸ். எஸ். சுந்தரம்

## பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடகுக்கடைச் சட்டங்கள்

ஆக்கியோர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு,

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்,
தபால்பெட்டி எண்:1447
4, தணிகாசலம் ரோடு,
சென்னை-17

விலை : ரூ. 5 பக்கம் : 62

மக்களுக்காக இயற்றப்படும் சட்டங்களைப் பற்றி, சட்டம் பயின்றோர் மட்டுமே அறிந்திருந்த காலம் மாறி, அனைவரும் அறியக்கூடிய நிலையை மக்கள் இன்று அடைந்துள்ளனர். அதற்கோர் உதாரணம் இந்நூல்.

விற்பனை வரிச் சட்டம், வாடகைக்குக் குடியிருப்போர் சட்டம், சுவீகாரச் சட்டம், ஜீவனாம்சம் பற்றிய சட்டம், வாரிசுரிமைச் சட்டம் இப்படி பல்வேறு சட்டங்களையும் எளிய முறையில் கூறுகிறது இந்நூல்.

அடகுக்கடை நடத்துவதற்கான விதிமுறைகள், அடகுக் கடைக்காரர்களுக்கான பொறுப்புகள் இவற்றை வரிசைக் கிரமமாகத் தெளிவுறஉணர்த்தும் வகையில் இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. அடகுக் கடைக்காரர்கள் மட்டுமல்ல, அடகு வைக்கும் பழக்கம் கொண்டோரும் தெரிந்துகொள்ள வேண்டிய விதிமுறைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

- வி. இராவணன்.

## செல்வத் திறவுகோல்

ஆசிரியர்: கருப்பக்கிளர் சு. ஆ. இராமசாமிப் புலவர்,
வெளியீடு: இமயப் பதிப்பகம்,
15, நீலா தெற்கு வீதி,
நாகப்பட்டினம்-611001

விலை: ரூ. 11 பக்கம்: 144

விநாயக கவசம், காரியசித்தி மாலை, ஆனைமுகக் கடவுளைப் போற்றுதல், சிவகவசம், சக்தி கவசம், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வமாலை, மழை மாலை ஆகிய நூல்களைத் தொகுத்து, எல்லாரும் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துரையும், விளக்க வுரையும் கூறப்பட்டுள்ளது. தெய்வமணம் கமழும் நூல்.

**வசந்த மலர்**

**ஆசிரியர்: சினிவீரப்பன்**

**வெளியீடு: சுதா பதிப்பகம்**
**4, முத்து முதலித் தரு, சென்னை-600007.**

**விலை : ரூ. 9 பக்கம் : 96**

**இது கவிதைத் தொகுப்பு நூல். தமிழ்மொழி, இயற்கை, உழைப்பு, காதல் பற்றிய கவிதை மலர்கள் பூத்துச் சிரிக்கின்றன. கவிதைகளில் சொல்வளம் மிகுந்து காணப்படுகிறது.**

**'இளமை'யைப் பற்றிக் கவிஞர் இப்படிக் கூறுகிறார்:**

**'வண்ணத்தில் வளம் கொழிக்கும்**
**வடிவத்தில் உளம் நிறைக்கும்**
**எண்ணத்தில் இதம் அளிக்கும்**
**எழிலான மலர்க் குவியல்!**

**— பி.வி.கிரி**

**பேட்டியில் பிறந்த கதை**

ஆசிரியர்: பி.வி.கிரி

வெளியிட்டோர் : பூங்கொடி பதிப்பகம், 14. சித்திரைக் குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600004

விலை ரூ:12 பக்கம்: 150

பத்திரிகைத் தொடர்புடையவரான நூலாசிரியர் அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், மறைமலையடிகள், மகாவித்வான்மே வீ.வேணுகோபாலப் பிள்ளை, டாக்டர் மு.வ., தேவநேயப் பாவாணர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., தவத்திரு பன்றிமலை சுவாமிகள் போன்ற பல்துறைப் பிரமுகர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் அவ்வப்போது பேட்டி கண்டு எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பு நூலே இது.

அறிஞர் பெருமக்களைப் பற்றிய பல அரிய விஷயங்களின் அற்புதப் புதையலாக இந்நூல் விளங்குகிறது. அனைத்துத் தரப் பாரும் படித்து மகிழலாம்.

**காவனூர் வேலன் கவிதைகள்**

ஆசிரியர்: காவனூர் வேலன்

வெளியிட்டோர்: பாவலன் பதிப்பகம், 21, காயிதேமில்லத் நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600005.

விலை ரூ:13 பக்கம்:128

நூலாசிரியர், அவ்வப்போது எழுதிவந்த கவிதைகளின் தொகுப்பே இந்த நூல்.

இயற்கை, செயற்கை, சமுதாயக்குறைபாடுகள், நெஞ்சில் நிலைத்தவர்கள் என எல்லாவற்றையும் இதிலுள்ள கவிதைகள் தொடுகின்றன. மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், சந்தக் கவிதைகள் எல்லாம் இந்நூலில் யாத்தளிக்கப்பட்டுள்ளன. கவிதைப் பிரியர்கள் விரும்பிப் படிக்கலாம்.

— 'முடிகொண்டான்'

**புனித வேளாங்கண்ணி அன்னை**

**ஆசிரியர் :** கவியழகன்,

**வெளியீடு:** சோமு புத்தக நிலையம், 84, காரணீஸ்வரர் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

**விலை : ரூ. 7.50. பக்: 80**

**புனித வேளாங்கண்ணி அன்னையைப் பற்றிக் கன்னித் தமிழில் யாவருக்கும் புரியும் வகையில் இந்நூல் படைக்கப் பட்டுள்ளது.**

**கிறித்துவ மதச் சம்பந்தமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ள விதம் பாராட்டத்தக்கது.**

**செல்வம் சேர்ந்தது எப்படி?**

**ஆசிரியர் :** திருமுருக கிருபானந்தவாரியார்.

**வெளியீடு:** குமரிப் பதிப்பகம், 20, பெருமாள் தெற்கு வீதி. நாகப்பட்டினம் - 611 001.

**விலை ; ரூ. 11. பக்: 160**

**இன்றைய நாட்டு நிலையைத் தன்னுடைய அனுபவத்தைக் கொண்டு எல்லோரும் படிக்கும் வகையில் நூலாசிரியர் தொகுத்துள்ளார்.**

**விபூதிக்குப் பஞ்சாட்சரம்** என்ற பெயருமுண்டு என்ற செய்தியினைக் கல்லாதஅரிசனப் பெண் கூறிய விதத்தை நூலாசிரியர் வியந்து எழுதியிருப்பது நமது மனத்தில் நிலைத்து நிற்கிறது. —அ. மருதவிநாயகம்,

# பார்த்தோம் படித்தோம்

1-10-87 இதழில் 'அரசுத் திட்டங்களின் வெற்றி' என்னும் தலைப்பில், மாண்புமிகு வணிக வரித் துணை அமைச்சர் அவர்களின் உரைத்தொகுப்பு அருமையாக இருந்தது.

—சொ. முத்தமிழ்வாணன்
தஞ்சாவூர்.

1-10-87 இதழில், 'தமிழக வறட்சிப் பகுதிகளில் பிரதமர்' என்ற பிரதமரின் பயணக் கட்டுரை படித்தேன். நேரில் பார்ப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

—ப. முருகேசப்பாண்டியன்
கரப்பாடி.

'இரத்த தானம்' பற்றிய கவிதை அருமை. விடுதலைப் போராட்டத் தியாகிகளை நினைவுகூர்ந்த விதம் சிறப்பாக இருந்தது.

—கோ. பார்த்திபன்
திருவரங்கம்

**புதிய பயிர் இரகங்களைத் தெரிவிக்கும் வேளாண்மைக் கட்டுரை எங்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. பொது அறிவுக் கட்டுரைகளையும், துணுக்குகளையும் இதழில் அதிகப்படுத்துங்களேன்.**

**—க. மலர்விழி,**
**மயிலாடுதுறை.**

**'மாணவர் பக்க'த்தின் மூலம் பொது அறிவுச் செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. 'நூல் நயம்' பகுதி தொடர்ந்து வெளிவரவேண்டும்.**

**—எம். இரத்தினவேலு**
**ஸ்ரீபெரும்புதூர்.**

**'வளரும் தமிழ்நாடு' என்னும் தலைப்பில் மாண்புமிகு அமைச்சர்கள் ஆற்றும் உரையிலிருந்து அரசின் திட்டங்கள் பற்றிய பல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.**

—எஸ். மகாலிங்கம்
—எஸ். விவேகானந்தன்
**கும்பகோணம்.**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் கலையழகுமிக்க சுற்றுலாத் தலங்கள்

சங்ககாலத்தில் பாண்டியர்களால் ஆளப்பட்ட புதுக் கோட்டை பகுதியானது, பின்னர் சோழர், பல்லவர், முகமதியர், விஜயநகர மன்னர்கள் ஆகியோரின் ஆளுகைக்குட்பட்டு, கடைசியாக 1640-ஆம் ஆண்டு தொண்டைமான் மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. தொண்டைமான் பரம்பரையில் 9 மன்னர்கள் புதுக்கோட்டையை சமஸ்தானமாகக் கொண்டு ஆண்டு வந்தனர்.



புதுக்கோட்டைப் பகுதியானது சரித்திர காலம் முதல் இக்காலம் வரை, பல மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டு இருந்த போதும், பல்லவர்களும், சோழர்களும்தான் குடவரைக் கோயில்களைக் கட்டி, தமிழகத்தின் காணற்கரிய சிற்பக்கலைவேலைப்பாடுகளை அதில் காட்டி உலகை வியப்படையச் செய்துள்ளனர். கொடும்பாளூர், குடுமியான்மலை, நார்த்தாமலை, குன்றாண்டார் கோயில், ஆவுடையார்கோயில் ஆகிய இடங்களில் உள்ளகோயில்களையும அங்குள்ள கலை வேலைப்பாடு மிகுந்த கற்சிற்பங்களையும் காணும்பொழுது புதுக்கோட்டை மாவட்டத்தை, தமிழகத்தின்கலைச் சிற்பக்கூடமெனக் குறிப்பிட்டால் அதுமிகையாகாது.

## விராலிமலை முருகன் ஆலயம்

குன்றுதோறும் ஆடிவரும் குமரப் பெருமானாம் முருகனின் திருத்தலம 15-16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதரால் பாடப்பெற்றவிராலிமலை. இங்கு ஆயிரக் கணக்கான மயில்கள் இயற்கையாகவே வசித்து வருவதால் இது **மயில்களின் சரணாலயமாகத்** திகழ்கிறது. பக்தர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களும் பார்க்க வேண்டிய இடமாகும் இந்த விராலிமலை.

## சித்தன்னவாசல்

புதுக்கோட்டையிலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ளது. அன்னவாசலின் கிழக்குப் பகுதியில் முட்டை வடிவப் பாறையில் அமைந்துள்ள இந்தக் குகைக் கோயில் ஜைனர்களால் கட்டப்பட்டது. இப்பாறையின் மேல், கிழக்குப் பகுதியில், பாறையைக் குடைந்து, உளியால் பாறையைச் செதுக்கி அருமையான கல் படுக்கைகளைத் தலையணை திண்டுகளுடன் வழவழப்புடன் உருவாக்கி உள்ளனர். அந்தப் பாறைகளை உடைத்து, இந்தக் கலைச் செல்வங்களை உருவாக்கியவர்கள் பெயர்கள் பாறையின் ஒரு பக்கத்தில் அசோகர் காலத்து பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.

பாறையின் மேற்குப் பகுதியில் பாறையைக் குடைந்து குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. குகைக் கோயில்களின் சுவர்ப் பகுதியில் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. அதன் விதானப் பகுதியில், கலையழகும், நயமும் மிகுந்த உயிர் ஓவியங்கள், வண்ணத்தில் வரையப்பட்டுள்ளன. அக்காலத்தில் இதைப் படைத்த ஜைனர்கள், தென்னிந்தியாவிலேயே தனித்துவம் பெற்ற இக்குகைக்கோயில்களையும், ஓவியங்களையும் படைக்கிறோம் என்பதை உணர்ந்து இருக்க மாட்டார்கள்.

குகையின் நுழைவாயிலில் இரண்டு கல் தூண்கள் நம்மை வரவேற்கும். இவை இரண்டும் புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகப் பொறுப்பிலிருந்த டாட்டன்ஹாம் என்ற வெள்ளையரால், குடுமியான்மலைக் கோயிலில் பாழடைந்த ஒரு பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டு நிறுவப்பட்டவை. அத்தூண்களின் மேல் கூரையில் போடப்பட்டுள்ள கற்பலகைகள், அருகே உள்ள பனங்குடி கிராமத்திலுள்ள பாறைப் பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்டவையாகும்.

முகமண்டபத்தைத் தாண்டி அர்த்தமண்டபத்தினுள் சென்றால் இரண்டு தூண்கள் தாங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். வடக்கு - தெற்கு மாடங்களில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வடக்குப் புறத்தில் ஜைனத் துறவியர் குடையின் கீழ் தவம் செய்யும் நிலையில் முழு உருவத்தில் செதுக்கப்பட்டுள்ளது. தெற்குப் புறத்தில் ஐந்து தலை நாகம் கவிழ்ந்து தலையில் குடை பிடிக்கத் தவம் செய்வது 23-வது தீர்த்தங்கரரான பார்ஸ்வநாதர் எனக் கூறப்படுகிறது. இதை அடுத்து உள்ளே போனால் தவ நிலையில் ஜைனதீர்த்தங்கரர்கள் வரிசையாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த வரிசையில் உள்ள இடது பக்கச் சிற்பமும் நடுவில் உள்ள சிற்பமும் முக்குடையின் கீழும், வலது கோடியில் உள்ள சிற்பம் ஒரு குடையின் கீழும் உள்ளதைக் காணலாம். ஒன்றிற்கும் மேல் குடையை உடையவர்கள் அவர்களது தீர்த்தங்கரர் பதவி உயர்வு நிலையையும், ஒரு குடை உள்ளவர் ஆச்சாரியராகவோ அல்லது சக்கரவர்த்தியாகவோ இருக்கலாமெனச் சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

இந்தக் குகைக்கோயில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது என்றும், அப்பொழுது ஆட்சியிலிருந்த பல்லவ மன்னர் முதலாம் மகேந்திர வர்மன் ஜைனர்களோடு நட்புடன் இருந்து, அப்பரால் சைவ மதத்தைத் தழுவச் செய்வதற்கு முன்னர் இந்தக்கோயில் செதுக்கப்பட்டது என்றும் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

மிகவும் அருமையான கலையழகும், ரசிகத் தன்மையும் ஒளிர அமையப்பெற்ற வண்ண ஓவியங்களைப் பார்த்தால் ஒரு கணம் நாம் இருக்கும் சூழ்நிலை மறந்து நாமும் அந்தத் தடாகத்தினுள் இருக்கிறோமோ என்று எண்ணத் தோன்றும். முழுமையும் தாமரை இலைகளாலும், தாமரைப் பூக்கள் மற்றும் அல்லிப் பூக்களாலும் நிறைந்து காணப்படும் நீர்த்தடாகம், அதில் கெண்டை மீன்களும், மகர மீன்களும் துள்ளிக் குதிக்கின்றன. அந்த மீன்களை வாத்து முகம் கொண்ட பறவைகள் வேட்டையாடுகின்றன. தடாகத்து நீரில் ஒருபுறம் யானைகளும், மறுபுறம் எருமைகளும் குளித்து விளையாட-இரண்டு சிறுவர்கள் தடாகத்தினுள் நீந்தி விளையாடித் தாமரைப் பூக்களைப் பறிக்கின்றனர்.

இவையனைத்தும் இயற்கை வண்ணம் மாறாமல் ஓவியமாகத் திட்டப்பட்டுள்ளது. கண்கொள்ளாக்காட்சியாக உள்ளது. அந்தத் தாமரை இலைகளின் கொடியின் மீதுள்ள முட்போன்ற கரும் புள்ளிகள்கூட இயற்கை மாறாமல் திட்டப்பட்டுள்ளன.

விதானத்தின் சுற்றுப்புறங்கள் அழகிய பூவேலைப்பாடுகள் கொண்ட ஓவியங்களும், தர்ம சக்கரமும் வரையப்பட்டுள்ளன. உட்புற எட்டுப் பட்டையுடன் கூடிய தூண்களின் மேல்புறத்தில் இரண்டு அழகிய அப்சரஸ் கன்னிகளின் உருவம் ஓவியமாகத் திட்டப்பட்டுள்ளது. தெற்குப் புறத் தூணின் மேற்புறத்தில் ஒரு மன்னனும் அவனுக்குப் பின் அவன் மனைவியும் அவர்களுக்கு முன் ஓர் ஆடவனின் உருவமும் திட்டப்பட்டுள்ளன. அந்த மன்னர் முதலாம் மகேந்திர வர்மன் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ஆனால் காலப்போக்கில் அந்த ஓவியங்களை, அருகிலுள்ள குளம் குட்டைகளில் இருந்து கொண்டு வரப்பட்ட தண்ணீரால் சுத்தம் செய்ததாலும் வண்ண ஓவியங்கள் பளிச்சென்று தெரிய முட்டையை அதன் மீது தடவியதாலும் அதன் களை சற்று இழந்து காணப்படுகிறது. இருப்பினும் காணற்கரிய கலைச் செல்வமாக விளங்குகிறது.

## கொடும்பாளூர்

புதுக்கோட்டையிலிருந்து 40 கி.மீ. தூரத்தில், முதலாம் இராசராச சோழனின் தந்தை இரண்டாம் பராந்தக சோழனது காலத்தவனாகிய பதி விக்ரமகேசரி எனும் இருக்கு வேளால் (கி.பி. 9) கட்டப்பட்ட மூவர் கோயில் உள்ளது. மூவர்கோயில் என்பதற்குச் சரித்திர ஆசிரியர்கள் பலவாறாக விளக்கங்கள் கூறுகிறார்கள். சைவப் பெரியார்களான அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய மூவரும் தனித்தனியே ஆளுக்கொரு கோவிலாகக் கட்டினார்கள் என்றும், மற்றும் சிலர் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் ஆளுக்கொரு கோயிலாகக் கட்டி வழிபட்டனர் என்றும் கூறுகின்றனர். இன்னும் சிலர், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகி



யோருக்குத் தனித்தனியே இக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றனர்.

எப்படியிருப்பினும் இம்மூவர் கோயில் தென்னிந்தியச் சிற்பக் கலையின் வரலாற்றிலும் கோயில் கட்டடக் கலையின் பரிணாம வளர்ச்சியிலும் சிறப்பானதொரு இடத்தை வகிக்கிறது. தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய கோயில்களுக்கு முன்னோடி யாகும் இக்கோயில்.

**நார்த்தாமலை விஜயாலய சோளீச்வரம்**

இராமாயண காலத்தில் இராம பிரானின் படைகளுக்கும் இலங் கேஸ்வரன்-இராவணனின் படை களுக்கும் யுத்தம் நடந்தபொழுது இராமபிரானின் படைகள் விஷ பாணத்தால், மயங்கிக் கிடந்த பொழுது அனுமார் சஞ்சீவி மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு வானில் பறந்து வரும் பொழுது, சஞ்சீவி மலையில் இருந்து உதிர்ந்து பூமியில் விழுந் தவைகள் இந்த நார்த்தாமலை யில் உள்ள குன்றுகள் என்று புராணங்கள் கூறுகின்றன.

அந்த நார்த்தாமலையில்தான் சோழப் பேரரசன் விஜயாலயன் கட்டிய விஜயாலயச் சோளீச் வரம் ஒன்றும், குடவரைக் கோயில்கள் இரண்டும் உள்ளன. ஒன்று பழையலி ஈச்வரம், மற் றொன்று சமணர் குடகு ஆகும். இக்கோயில் சிற்ப வேலைப்பாடு களுக்கு மிகவும் புகழ்பெற்றது ஆகும். இக்கோயிலின் அடிப் பாகத்தைச் சுற்றிலும் உள்ள யானைகள் மற்றும் யாழிகளின் உருவங்கள் மிகவும் சிற்பவேலைப் பாடுகளுடனும், கலையழகுட னும் மிளிர்கின்றன.

**ஆவுடையார்கோயில்**

புதுக்கோட்டையிலிருந்து கிழக்கே 49 கி.மீ. தூரத்திலுள் ளது. கவிச்சக்கரவர்த்தி கம்ப னால், பாண்டிய நாட்டின் எல்லை யெனக்கூறப்பட்டுள்ளவெள்ளாற் றின் தென்கரையிலே பாண்டிய மன்னர் 'அரிமர்த்தன' பாண்டிய ரின் அமைச்சராக இருந்த 'திரு வாசகம்' தந்தருளிய மாணிக்க வாசகரால் எழுப்பப் பெற்றது திருப்பெருந்துரை என்கிற ஆவுடையார்கோயில்.

ஏறத்தாழ 2,000 ஆண்டு களுககு முன்னாலேயே எழுப்பப் பட்ட இந்தக் கவிபாடும் கலைக் கூடத்தின் சிறப்புகளை எளிதில் சொலலிவிட முடியாது.

புதிதாகக் கோயில்கள் கட்டு கின்ற ஸ்தபதியார்கள் அனை வரும் ஆவுடையார்கோயில் சிற்ப அடங்கலுக்குப் புறம்பாக என்று தங்களது ஒப்பந்தத்தில் குறிப் பிட்டு எழுதுவதிலிருந்தே இக் கோயிலின் கலைத்திறன் வேறு எந்தக் கோயிலிலும் அடங்காது என்பது தெளிவாகிறது.

**கொடுங்கை**

ஒரு வீட்டிற்குத் தாழ்வாரம் அமைக்கும்போது மரச்சட்டங் களால் பக்கவாட்டில் கைகள் அமைத்து அதனை இரும்புக் கம்பிகளால் இணைத்து அதன் மீது குறுக்குச் சட்டங்கள் அமைத்து, பினனர் ஓடு வேய்வது வழக்கம. தேக்கு மரச் சட்டம் போல் கல்லை இழைத்து அதிலே குறுக்குக் கம்பிகளும், நான்கு பட்டை, ஆறு பட்டை, உருண் டைக் கம்பிகளும் இணைத்து அதிலே குமிழ் ஆணி, பட்டை ஆணி அறைந்திருப்பதுபோல் எலலாமும் கல்லில் செய்து, அதன் மீது மெல்லிய ஓடு வேய்ந்து இருப்பது போன்று செதுக்கி அமைத்திருப்பது, சிற்பக்கலை என்றால் என்ன வென்று அறியாதவர்கள்கூட வியக்கத்தக்க ஒப்பற்ற திற னாகும். 2 அடி கனமுள்ள கற்களை 1 அங்குல கனமுள்ள கொடுங்கைகளாக்கிக் கோயிலின் சுற்றுப்புறத் தாழ்வாரங்களாக ஒன்றோடு ஒன்றாக இணைக்கப் பட்டுள்ளது கண்கொள்ளாக் காட்சியாகும்.

**கல் சங்கிலி**

தியாகராஜ மண்டபத்தில் 10-15 வளையங்கள் கொண்ட கற்சங்கிலிகள் ஒரே கல்லில்



செதுக்கப்பட்டு உயரத்தில் பொருத்தி, தொங்க விடப்பட்டுள்ள ஒரு அரிய சிற்ப வேலைப்பாடாகும்.



### சிற்ப வேலைகள்

உயிர்த் துடிப்பு ஒன்றைத் தவிர மற்ற எல்லா அம்சங்களும் இங்குள்ள சிலைகளில் உள்ளன. சிலைகளின் கால் நரம்புகள், தலைமுடிகூட சன்னமாக செதுக்கப்பட்டுள்ளன. தற்கால நவநாகரீக நகைகள், பிளாஸ்டிக் கவரிங் நகைகள் போன்ற அனைத்து நகைகளும் 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே இங்குள்ள சிலைகளில் வடிக்கப்பட்டுள்ளன. ஆணின் கிருதா மீசை, பெண்ணின் சிகை அலங்காரம், கால் செருப்புகள், மிடி பாவாடைகள் போன்றவைகளும் அக்காலத்திலேயே இருநதமைக்குச் சான்று கூறுகின்றன.

### தேர்

ஆவுடையார்கோயில் தேர், உலகப் புகழ் பெற்றது. மருத்துவச்சி ஒரு பெண்ணுககுப் பிரசவம் பார்ப்பதும், அப்பெண்ணின் கருப்பையிலிருந்து குழந்தையின் தலை வெளியே தெரிவதை மருத்துவச்சி ஏந்திப் பிடிப்பதும், உயிரோட்டமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இத்தகைய அரிய பல காட்சிகளைச் சிற்பமாகத் தன்னகத்தே கொண்டுள்ள ஆவுடையார்கோயில் தேரின் சிற்ப வேலைப்பாடுகள் உலகில் வேறு எங்கும் காண முடியாத காட்சிகளாகும்.

### குதிரைகள்

சிவபெருமான் தாவுப்பரி என்ற பஞ்சகல்யாணிக் குதிரையில் பவனி வருதல் அரபுநாட்டுக் குதிரைகளில் வீரர்கள் பவனி வருதல் போன்ற சிலைகள் உயிர்க் குதிரைகள் போன்று அமைக்கப்பட்டுள்ளன.

### ஓலைச் சுவடிகள்

ஆவுடையார்கோயில் ஆத்மநாதர் ஆலயத்தில் 1,000 ஆணடுகளுக்கு முந்திய ஓலைச் சுவடிகளான திருவாசகம், திருக்கோவையார் ஓலைச் சுவடிகள் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### திருக்கோகர்ணம்

புதுக்கோட்டை நகரிலேயே அமைந்துள்ள அருள்மிகு பிரகதாம்பாள் கோயில், ஆதியில் குடவரைக் கோயிலாக எழுப்பிக்கப்பட்டது. குடவரையின் அமைப்பையும், அதிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளையும் நோக்குகையில், இக்கோயில் முதலாம் மகேந்திர வர்மன் காலத்திலே எழுப்பிக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. பிறகு பல மன்னர்கள் மற்றும் இன்றைய தமிழக அரசும் திருப்பணிகள் செய்து இன்றைய அமைப்பு உருவாகியுள்ளது.

---



## தைரியத்தின் திருவுருவம்

தைரியத்தின் திருவுருவமாகத்தான் திருமதி இந்திராகாந்தி திகழ்ந்து வந்தார். சாவைப் பற்றியோ கொலையைப் பற்றியோ அவர் கிஞ்சித்தும் கலங்கியது இல்லை.

1984 அக்டோபர் மாதம் அயல்நாட்டு நிருபர் ஒருவர் இந்திராகாந்தியைப் பேட்டி கண்டார். உங்களைக் கொல்ல அடிக்கடி முயற்சி நடக்கிறதே? உங்களுக்கு அது அச்சத்தைத் தரவில்லையா?'' என்று கேட்டார்.

அன்னை இந்திரா உறுதிமிக்க தொனியில் ''இல்லவே இல்லை. எனக்கு அச்சம் என்பதே இல்லை.

''என்னை அடிககடி தாக்குகிறார்கள். ஒருவன் துப்பாக்கியால் குறி பார்த்தான். இன்னொரு சந்தர்ப்பத்தில் டில்லியில் ஒருவன் என்மீது கத்தியை எறிந்தான் என்று பதிலளித்தார்

1975 மார்ச் 18ந்தேதி அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு வெளியே குண்டுகள் நிரப்பிய ரிவால்வரை வைத்திருந்ததற்காக, கோவிந் மிஸ்ரா என்ற பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டார். ஒரு தேர்தல் வழக்கில் திருமதி இந்திராகாந்தி சாட்சி சொல்ல வந்த சற்று நேரத்திற்கு முன்னதாக இது நடந்தது.

### திருமயம்

இதுபுதுக்கோட்டையிலிருந்து20 கி.மீ.தூரத்திலுள்ளது.16-17ஆம் நூற்றாண்டுகளில் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் வடக்கு எல்லை பாடி வீடாக இக்கோட்டைவிளங்கியிருக்கிறது. சேதுபதி மன்னர், அவரது மைத்துனரும், முதலாம் தொண்டைமான் மன்னருமான, ரகுநாதராய தொண்டைமானிடம் திருமயம் கோட்டை அடங்கிய பாளையத்தை ஒப்படைத்தார். 7 சுற்று மதில்களை உடைய இக்கோட்டை சிறிய குன்றின் மீது அமைந்துள்ளது. இங்குள்ள எண்கோண வடிவக் குளமும், கோட்டை மீதுள்ள பீரங்கியும் சிறப்பு அம்சங்களாகும்.

இந்தக் கோட்டையை ஒட்டிய தெறகுப் பகுதியில்தான் சிவன் கோயிலும் விஷ்ணு கோயிலும் உள்ளன. இக்கோயிலகள் மலையைக் குடைநது கட்டியிருப்பது இதன் சிறப்பு அம்சமாகும். மேலும் ஸ்ரீரங்கத்தில் இருக்கும் பெருமாள் கோயிலுககு முன்னரே இந்தக் கோயில் கடடப்பட்டு விட்டது என்றும், வைஷ்ணவப்பெரியாா திருமங்கை ஆழ்வார் இங்கு எழுந்தருளியிருக்கும் விஷ்ணுவைப் பாடியிருக்கும் பிரபந்தங்களினால் இக்கோயில் மிகவும் புகழ்பெற்றது என்றும் கூறப்படுகிறது. தமிழகக் குடவரைக் கோயில்களில் இதுவும் ஒன்று.

புதுக்கோட்டை மன்னராகிய தொண்டைமான், வீரபாண்டிய கட்டபொம்மனையும் அவனது தம்பி ஊமைத்துரையையும் வெள்ளையர்களிடம ஒப்படைக்கு முன்னர் திருமயம் கோட்டையிலதான் வைத்து இருந்தார் என்ற பரம்பரைக கதையும் கூட நிலவி வருகிறது.

### குடுமியான்மலை

இது புதுக்கோட்டையிலிருந்து மேற்கே 20 கி.மீ. தொலைவில இருக்கிறது. இங்குள்ள கோயில் **சிக்கநாதர்,** அல்லது **குடுமிநாதர்** கோயில் என்று அழைக்கப்படுகிறது. இந்தக 'குடுமிநாதர்' என்று அழைப்பதற்குகூட தல புராணம் விளக்கம்- கூறுகிறது. இந்தக் கோயிலில் பூஜை செய்யும் அர்ச்சகர், கடவுள் பூஜைக்கு வைக்கப்பட்ட மலர் மாலையைப பூஜைக்கு வைக்காமல் அவரது காதலிக்குக் கொடுத்துவிட,அந்த நேரம் பார்த்து மன்னன் சாமி கும்பிடக் கோவிலுக்குவர, அர்ச்சகர் செய்வதறியாது திகைத்து, தனது காதலியின் தலையில் இருந்த பூவையே அவசரமாகக் காதலியின் மயிர்க்கற்றையோடு எடுத்து லிங்கத்தின் மீது வைத்து பூஜை செய்து அதை மன்னனுக்கு கொடுக்க, மன்னன்மயிர்க்கற்றையோடு இருந்த மலர்களைப் பார்த்து, காரணம் கேட்க, அர்ச்சகர் செய்வதறியாது நடுங்கி இறைவனை வேண்டிக்கொண்டு, மன்னனிடம் அது இறைவனின் முடியில் இருந்த மயிர்க்கற்றை என்று கூற, மன்னன் லிங்கத்தை உற்றுப் பார்த்த பொழுது,லிங்கத்தின் மேல்புறத்தில் மயிர்க்கற்றயை மன்னனுக்குக் காண்பித்து அர்ச்சகரைக் காப்பாற்றியதால் அந்தக் கோயிலுக்குக் குடுமியான் மலை என்று பெயர் வந்ததாகத் தலபுராணம் கூறுகிறது. கண்ணப்பநாயனார் கும்பிட்ட காளகஸ்திகடவுளின் பெயர் குடுமித்தேவர் என்பது நினைவுகூரத்தக்கது.

முதலில் நம்மை வரவேற்பது ஆயிரங்கால் மண்டபமாகும.இது அழிந்த நிலையில் உள்ளது.இதைதாண்டி உள்ளே சென்றால் நாம் காணும் மண்டபம் விஜய நகர் காலத்துச்சிற்ப வேலைப்பாடுகளோடு உள்ளது. இரண்டு பககமும் உள்ள தூணகளில கணபதி, சுப்பிரமணியர், இராவணன் உக்கிர நரசிம்மர், இரண்ய சம்காரத் தோற்றம், இராமர், மற்றும் கவாச்சி மிக்க மோகினி அவதாரம் ஆகியவை, அழகிய சிலைகளாகச் செதுக்கப்படடுள்ளன. வீரபத்திரர், காளிசிவனின் ருத்ர தாண்டவம் ஆகியவைகளும் விஷ்ணு, கருட பகவானுடனும், அனுமானுடனும் உள்ள இரண்டு விக்ரகங்கள் ரதி மன்மதன் உருவங்கள் பாங்குறச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. குதிரைப் படை வீரர்களும், தரைப்படை வீரர்களும் போடும் சண்டையில் அவர்கள் கையாண்ட தற்காப்பு யுக்தியுடன் உபயோகப்படுத்திய ஆயுதங்களின் அமைப்பும் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளது அருமையான சிற்பக் கலைத்திறன் உடையதாகும்.

இவ்வாறுபலதரப்பட்டகடவுள்களின் அவதாரங்கள் சிலை வடிவில் பாங்குற வடிக்கப்பட்டுள்ளன. இவை பல்லவர்களின் பிந்திய காலத்தினையும், சோழர்களின் முந்திய காலத்தின் சிற்பக் கலையையும் கொண்டதாக உள்ளன.

திருமயத்திலுள்ள கோட்டையில் ஊமைத்துரையின் சிலை வைத்துச் சுற்றுலாத் தலமாக்கவும் சித்தன்னவாசலில் ரூபாய் 2 லட்சம் செலவில் பூங்கா அமைக்கவும் அரசு பரிசீலனை செய்துவருகிறது. இந்த ஏற்பாடுகளினால் புதுக்கோட்டை மாவட்டம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

**ஆ. கோபாலன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**புதுக்கோட்டை மாவட்டம்.**



## அப்போ சரிதான்

**ஆ**ண்டு 1935. பிப்ரவரி மாதம்.

வங்காளத்தின் கவர்னராக இருந்த சர் ஜே.அண்டர்சன் சாந்திநிகேதனத்தைச் சுற்றிப் பார்த்து வருகிறார்.

பெண்கள் விடுதி நுழைவாயிலில் ஓர் அறையில் மேஜை மீது அழகாகப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறை நேர்த்தியும், அது பராமரிக்கப்பட்டுள்ள விதமும் கவர்னரைக் கவருகின்றன. தற்செயலாக நின்று, அங்குப் புத்தக அலமாரியில் உள்ள புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார் கவர்னர்.

''சோஷலிசத்துக்குப் புத்திசாலிப் பெண்ணின் வழித்துணை'' என்ற பெர்னாட் ஷாவின் புத்தகம் கைக்குக் கிடைக்கிறது. அடுத்த புத்தகத்தைப் பார்க்கிறார். இன்னொன்று எடுக்கிறார். எல்லாமே சோஷலிசம் பற்றிய நூல்கள்.

''இந்த ரெட் லேடி யார்?'' என்று பக்கத்தில் இருந்தவர்களிடம் கேட்கிறார் கவர்னர்.

''நேருவின் மகள்'' என்று பதில் கிடைக்கிறது. கவர்னர் கிண்டலாகச் சொல்கிறார். ''அப்போ சரிதான். . . ..!''

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

Licence No. TN/MS(C)/PP-23



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்



ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002